# திராவிடநாடு

20—11—60 | வார வெளியீடு | விலை 16 காசு


## கடமை

[வெ. இரா. மணி]

சாதியிங் கேதெனச் சாற்றினர்—மூடத்
   தன்மைகள் செத்திடச் செய்தனர்
பேதமில் வாழ்வினைக் காட்டினர்—தீய
   பித்தரை நாட்டைவிட் டோட்டினர்

கடவுளர் பூசையில் காசினைக்—கொட்டிக்
   களித்திடும் மாந்தரை ஏசினர்
கடமையில் தவறினோர் கண்களில்—உண்மை
   காந்தமாய்ப் பற்றவே பண்ணினர்

முத்தமிழ்ப் பேச்சிலே மக்களை—நெஞ்சம்
   மொய்த்திடக் கவர்ந்தனர், பக்கலில்
செத்திடும் உயிருளே செந்தமிழ்—பாய்ச்சிச்
   சேர்த்தனர் ஊட்டமே சிந்தையில்

எத்தனை எத்தனை உண்மைகள்!—அதனை
   ஏய்வதில் எத்துணை வன்மைகள்!
புத்துயிர் பெற்றிடப் புத்தகம்—தந்து
   போற்றினர் தமிழினை நித்தமும்

பழகிடத் தெரியுமே பண்புதான்—தூய
   பாலதைப் போலுளம் வெண்மைதான்
கழகமே! காலமும் கடமையாம்—தமிழைக்
   காப்பதுன் வாழ்விடை பெருமையாம்.

# அந்திக்கலம்பகம்



பொன்னி! நானும் உன் பேச்சைக் கேட்டுக் கேட்டு, மயங்கிப் போய், பெண்களுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டியதுதான், சமத்துவம் இருக்கத்தான்வேண்டும், ஏன் என்றால், நாகரீகமான நாடுகளிலே பெண்கள் அப்படித்தான் இருக்கிறார்கள், நாமும் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று, நம்பினேன்... ஆனா, பொன்னி! அவர் அந்தச் சேதியைச்சொன்னதும், பெண்களுக்கு உரிமை கொடுக்கப்போனா, என்னென்ன ஆபாசம், அக்ரமம் நடக்கறது என்பது விளங்கிவிட்டது. வேண்டாண்டிம்மா, வேற்றுத் தேசத்திலே இருக்கற, பெண் உரிமையும் சமத்துவமும்...

முடிந்ததா; இல்லையானா இன்னும் எதாவது பாக்கி இருக்கா. புதை பாணம் மாதிரியாக் கிளம்புவதைப் பார்த்தா, கோபம் தலைக்கு ஏறிவிட்டிருக்கும்னு தெரியுது.

கோபம் இல்லை, பொன்னி! நெஜமாச் சொல்றேன், வெட்கம் பிடுங்கித் தின்கறது. என்னதான், ஆண்களோடு சமமா இருக்கவேண்டும் என்று தோணினாலும், நடையிலே உடையிலே செய்துகாட்டுவதோடு இருக்கக்கூடாதா? கட்டுத்திட்டம் இல்லாமலா, காட்டுமிராண்டிக் கூட்டம்போல நடந்துகொள்ளணும்......

யார் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டது-எங்கே, என்ன நடந்தது; சொல்லிவிட்டுக் கோபத்தைக் கொட்டினா, விஷயம் புரியும், விளக்கம் தரவும் சவுகரியமா இருக்கும்...

நீ, விளக்கம் வேறே தரப்போகிறயா, விளக்கம்!

விளக்கம் என்பது பிடிக்காவிட்டால், விட்டுவிடு. மறைந்து கிடக்கற உண்மையை, எடுத்துக்காட்டுவதுன்னு வைத்துக்கொள்ளேன்...

மறைந்துகிடக்கற உண்மையை எடுத்துக்காட்டப்போறயா! என் வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே. மறைந்து இருந்தாத்தானே...

ஏன்ன சொல்றிங்க, நீங்க?

நாங்களா? நாங்க உங்களை வேறே ஒண்ணும்; கஷ்டமான காரியம் செய்யச் சொல்லவில்லை. உடம்பைத் துணியாலே மறைச்சிண்டு, மட்டுமரியாதை மானம் மனுஷத்தனம் இவைகளைக் காப்பாத்துங்கன்னு சொல்றோம்.

யார் இப்ப, தலைவிரி கோலமாத் திரிந்துகொண்டிருக்கா-எதனாலே, இவ்வளவு பதறிப் பேசறிங்க...?

ஏண்டி பொன்னி! மனிதருக்கும் மிருகத்துக்கும் என்ன வித்யாசம், சொல்லு...

இப்படிக்கேட்டா, நான் என்னத்தைப் பதில் சொல்றது...... எத்தனையோ இருக்குது வித்தியாசம்.

மானத்துக்கு அஞ்சி நடக்கறதுதான், மிருகத்துக்கும் மனிதருக்கும் இருக்கிற, மூக்கியமான, வித்யாசம்......

**சி. என். ஏ.**

ஆமாம்...இப்ப, யாரு, பெண்களை, மானமத்து நடந்துகொள்ளச் சொன்னாங்க......

யாரா? எல்லாம், நீ பேசுவயே, சம உரிமை, நாகரீகம் என்றெல்லாம், அதுதான்.

எனக்கு ஒண்ணும் விளங்கவில்லையே......

சின்னக்குழந்தை! ஒண்ணுமே தெரியாது. ஏண்டி, உலகத்திலே, எங்கெங்கே கோடியிலே எல்லாமோ நடக்கற விஷயத்தைத் துருவித் துருவிக் கண்டுபிடித்து, கதை கதையாச் சொல்வயே, இது தெரியாது, உனக்கு? மானங்கெட்டதுங்க, நாகரீகம் என்கிற பெயராலே ஆடிக்கொண்டு இருக்கற ஆபாசமான ஆட்டம்.

இப்ப ஆடுவதாச் சொல்றுங்களே, உடலைச் சரியா மறைக்காதபடி, நைலான் துணியாலே தைத்த டிரஸ் மாட்டிண்டு... அதைச் சொல்றிங்களா......?

அந்தக் கண்றாவிகூட அல்லடிம்மா...உடலைச் சரியா மறைக்காம ஆடுவதே, பேயாட்டம்னு ஒழுக்கம் தெரிந்தவா சொல்லிக்கண்டிக்கிறா...இது, மோசமான காரியம்டி......சூரிய வெளிச்சத்திலே குளிக்கிறதாமே, நிர்வாணமா......

அடடே! அதைச்சொல்றிங்களா! அதுதான், உங்களுக்கு அவ்வளவு கோபம் வருது.

என் எதிரே மட்டும் சிக்கினா, அந்தச் சிறுக்கிகளை நொறுக்கு நொறுக்குன்னு நொறுக்கிவிட்டு மறுவேலை பார்ப்பேன். கழுதை குதிரை, நாய் நரி, ஓநாய் ஒட்டகம், ஆடுமாடு, இதுகளெல்லாம் பிறந்தமேனியாத் திரியறது...... மனுஷாளுமா அப்படி ஆகிவிடறது! அதிலேயும் பெண்கள்! பெண்களுக்கு மானமே ஆபரணம்னு பெரியவா சொல்லி இருக்கா. இதுகள் என்னடான்னா, துணியே கட்டுவது இல்லையாமே......பிறந்தமேனியாப் படுத்துப் புரள்வதாமே, சூரிய வெளிச்சத்திலே...அதிலே என்னமோ ஆரோக்யம் இருக்குதாம், நாசமாய்போன ஆரோக்யம்! இதுக்கு ஒரு சங்கமாம்! அந்தச் சங்கத்துக்கு ஒரு தலைவியாம்! பொன்னி! சவுக்காலே அடிக்கணும் இப்படிப்பட்ட, சண்டாளிகளை......—

எந்தப் பேப்பர்லே பார்த்தே இந்த விஷயத்தை......

இந்தக் கர்மத்தையா......? அவருக்கு யாரோ சொன்னார்களாம்...

சூரியனுடைய வெளிச்சம் இருக்குதே, அது நம்ம நாட்டிலே சர்வ சாதாரணம். குளிர் நாடுகளிலே, பனி பெய்துகொண்டு இருக்கற நாடுகளிலே, சூரிய வெளிச்சம், கிடைப்பதே இல்லை, எப்பவாவது நல்ல வெளிச்சம் இருந்தா, அந்த நாட்டு மக்களுக்கு ஒரே கொண்டாட்டம்......

ஏண்டி பொன்னி! அந்தக் கொண்டாட்டத்தை, அடக்க ஒடுக்கமாச் செய்யப்படாதா......

நான், அவர்கள் செய்யறது சரின்னு வாதாடுகிறேன். சூரிய

(4-ம் பக்கம் பார்க்க)

# 'வேதனை வெள்ளம்'

19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (20—11—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 19

'எப்போ வருமோ' என்று எவரும், சின்னாட்களுக்கு முன் மழையை எதிர்நோக்கி ஏங்கியிருந்தனர். உழவர் பெருமக்கள் உலர்ந்த வயல்களைக் கண்டபோதெல்லாம், பட்டபாடு பாழாகிவிடுமோ என்று உள்ளம் புலந்து வானம் நோக்கிக் கண்ணீர் வடித்தனர். நகர மக்கள் குழாயடியில் குமைந்தனர். ஏரி குளங்கள் 'ஆ' என வாய்பிளந்து நின்றன.

இயற்கை அருள் சுரந்தது: வானம் பெய்தது. மண்ணின் பசி அடங்குமாறு மழை பொழிந்தது. ஏரியும் குளமும் நிரம்பின; வழிந்தன; ஒரு துளி நீர் காணாது உலர்ந்து கிடந்த வயல்கள் எல்லாம் நீரில் மூழ்கின. நகரம் சில பகுதிகளில் தீவு ஆகியது. வெள்ளம் புரண்டது. வேண்டிய அளவு பொழிந்து விட்டது; இனி வேண்டாம் மழை' என்று எல்லாரும் நினைத்தனர். ஆனால் மழை விடவில்லை; வெள்ளம் வடியவில்லை. முதலில் வேடிக்கையாக இருந்த வெள்ளம் பிறகு வேதனையாக மாறியது. மழையைக்கண்டு மக்கள் செய்த ஆரவாரம். அல்லோலகல்லோலமாகியது. அழுது, நஞ்சு ஆகியது.

மரங்கள் முறிந்து, மண் சரிந்து, பாதை பள்ளமாகி, வீடு விழுந்து எங்கும் வேதனை, விம்மல், அழுகை மலிந்துவிட்டது. இட்ட பயிர் அழியக் கண்ட உழவன், செய்யத் தொழில் அற்ற கைவாளி, இப்படி அல்லல் உறுவோர் தொகை நாளுக்கு நாள் மிகுகின்றது. மழையும் விட்டாற்போல் இருந்து தொடர்கின்றது.

இந்நிலையில், ஆங்காங்கே உள்ள சான்றோர்களும் தொண்டர்களும் தம்மால் ஆன உதவிகளைச் செய்த வண்ணம் உள்ளனர். சோறிட்டுச் சோர்வை மாற்றுவது, துணி கொடுத்துத் துயர் துடைப்பது, இடம் அளித்து இதம் தருவது. இப்படிப் பல பணிகள் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. குறிப்பாக நமது கழகத் தோழர்கள் பலபகுதிகளில் நல்ல பணிகளைத் தொண்டுகளைச் செய்துவருகின்றனர். இவையும் இவைபோன்ற உதவிகளும் வரவேற்கத்தக்கன. மேலும் இத்துறையில் நமது கழக நண்பர்கள் அயர்வு இன்றிப் பாடுபடுவார்கள் என்பதை அனைவரும் அறிவர்.

இது ஒருபுறம், இன்னொருபுறம் காண்போம்: ஆட்சித்துறையில் உள்ளோர் செய்தது என்ன? செய்ய ஏதாவது எண்ணமேனும் உண்டா? மத்திய அரசின் மனத்தில் இத்துன்பங்கள் உறைக்கின்றனவா? என்றும் நாம் இந்த நேரத்தில் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பொதுமக்களாக முன்வந்து செய்யும் உதவிகள் நெடுநாட்கள் நீடிக்க இயலாது; நிலைத்தும் நிற்கமாட்டாது. சின்னாட்களுக்கே இப்பணிகள் நடைபெற இயலும். அதற்குப் பிறகு? அவதியுற்றோருக்கு ஆறுதல் கூறுவதற்கு என்ன வழி? அவர்களுக்கு நிம்மதி வேண்டாமா? வாழ்வைத் தொடங்க அவர்களுக்கு வழி செய்து தரவேண்டியது ஆட்சியாளர் கடன் அன்றோ?

மாநில ஆட்சியாளர் கடனைவிட, இதில் மத்திய ஆட்சியினர் கடனே மிகுதியானது. வடநாட்டில் பல பகுதிகளில் வெள்ளம் உருளுவதற்கு முன் அங்கெல்லாம் வேகமாக உதவிகள் விரைவதைக் காண்கின்றோம். ஆகாய விமானங்களின் வழியே உணவுப் பொட்டலங்கள் வழங்குவது, மீட்புப் பணிகளில் ஈடுபடுவது, பண்டிதரே அந்தப் பகுதிகளில் பறந்து நிலைமைகளை அறிவது, அவர்க்குப்பின் அத்தனை அமைச்சர்களும் சென்று திரும்புவது என்று இப்படிப் பல முயற்சிகள் அங்கே நடைபெறுகின்றன. வடக்கே ஓரிடத்தில் ஏதாவது நடைபெற்றாலும் அவர்களுக்கு உள்ளம் பதைக்கிறது, உதவி செய்ய விரைந்தோடுகின்றனர். இதில் தவறொன்றும் இல்லை.

ஆனால்,

தெற்கே, நம் மண்ணில் இதுவரையில் நாம் அடைந்துவரும் அவதிகளைச் சொல்லி மாளாது. ஊருக்குள் வெள்ளம், நகரில் இலட்சம் பேருக்குமேல் தவிப்பு—என்று துன்பம் வளர்ந்தவண்ணம் உள்ளது. இந்த நேரத்திலும் வடக்கேயிருந்து வாட்டம் போக்கும் முயற்சிகள் ஏதும் இல்லை என்றால் என்னவென்று சொல்வது?

நம்மை, வாழ்வில்தான் கவனிக்கவில்லை; தாழ்விலாவது கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாதா?

'தமிழன் என்றோர் இனம் உண்டு' என்பதையே மறந்தவர்கள்போல் அவர்கள் நடந்துகொள்வதைப் பார்க்கும்போது இரத்தம் கொதிக்கவில்லையா? உண்மை விளங்கவில்லையா?

விளங்குகின்றது சிலருக்கு. அன்பர் ஆச்சாரியார் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். 'திட்ட நிதியிலிருந்து சிலகோடி ரூபாய்களைச் செலவிட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக உதவிகளைச் செய்யவேண்டும்' என்று. இப்படிப் பல முறை வடக்கே செய்துள்ளனர். மனம் இருக்குமானால் இப்போதும் அப்படிச் செய்யலாம். செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியாவது இணங்கவைத்து நம்மக்களுக்குப் பக்கம் நிற்கவேண்டியது ஆட்சியாளர்கள்—அமைச்சர்களின் பொறுப்பு.

பொறுப்புணரும் அமைச்சர்களாக ஆவார்களோ, மக்களின் வெறுப்புக்காளாவார்களோ, நாம் அறியோம்!

❋

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

னுடைய கதிர்கள் உடலிலே பட்டு தானு, சில வியாதிகளெல்லாம் போய்விடுமுனு, வைத்திய சாஸ்திரம் கூட இருக்குதே......

இருக்கும்டி, இருக்கும். துணியே கட்டாதிங்க......படுத்துப் புரண்டு கிட்டு இருங்க சூரிய வெளிச்சத்திலே, உடம்பு தங்கமாயிடும்னு, வைத்திய புத்தகம் சொல்லுது; இவ படிச்சா...பெரிய டாக்டர்... மனோன்மணி இவ;......

ஐயயோ! டாக்டர் மனோன்மணியையே, கேட்டுப்பாருங்களேன்...

என்னத்தைக் கேட்க, பிறந்த மேனியாத் திரிகிறாளே புண்யவதிகள், அவாளைத் தெரியுமான்னு, டாக்டர் மனோன்மணியைக் கேட்கவா...... நூறுயுசம்மா உனக்கு, மனோன்மணி...இதைக் கேளு...

மனோன்மணி! நான் விளக்கமாச் சொல்றேன்...

நீஒண்ணும் விளக்கவும் வேணும், குழப்பவும் வேணும்......நான் கேட்டுக்கறேன் மனோன்மணியை. ஏண்டிம்மா, நீ டாக்டர் வேலைக்குப் படிச்சயே......

படித்தது மட்டுமா, இப்ப டாக்டராகத்தானே வேலை பார்த்துக் கொண்டு இருக்கறேன்.

ஆமாம், ஆமாம் — அதை யார் இப்ப, மறுத்தது. நீபடித்த புத்தகத்திலே எழுதியிருக்கா, உடலிலே துணியைக் கூடச் சுத்திக்கொள்ளாமப்படிக்கு, சூரிய வெளிச்சம் உடலிலே படும்படியாகப், படுத்துக் கிடந்தா நோய்நொடி இருக்காது, உடம்பு தங்கமாகும்னு...இல்லே... தெரியாமத்தான் கேட்கறேன், சொல்லு...

அதாவது, மனோன்மணி! நிர்வாண சங்கத்தைப்பற்றி யாரோ, புரளி கிளப்பிவிட்டிருக்கா...... அதனாலே இந்த ஆத்திரம்...

ஆத்திரம் வர்ரது தப்பு. அவா ஆடை இல்லாமலிருப்பது, மெத்தச் சரியான காரியம். ஏண்டிம்மா, டாக்டர்! நீயும் அது சரி என்கிறயா......

நானேகூட, அதைச் சரின்னு சொல்லலியே...

நான், டாக்டர் என்கிற முறையிலே சொல்கிறேன், சூரியவெளிச்சத்தாலே என்ன பலன் கிடைக்கணும்னு எதிர்பார்க்கிறார்களோ, அதை அவர்கள் செய்வதுபோல ஒரு ஆபாசமான, அருவருக்கத்தக்க முறையாலேதான், இங்கே பெறமுடியும்னு நினைப்பது, சுத்தப் பைத்யக்காரத்தனம்.

போக்கிரித்தனம்னு சொல்லு! சங்கம் ஒருகேடா இந்தக் காரியத்துக்கு. காரி உமிழமாட்டாளா, இந்தத் துப்புக்கெட்டதுகளை...

பலபேர் பார்க்கற இடத்திலேயா சங்கம் இருக்கும்.

நாகரீகம் முத்திப்போச்சாம்...... நாகரீகம்! புத்தி நாசமாகறதுக்குப் பேர், நாகரீகமா! மானத்தைப்பத்தி கவனிக்காமலிருப்பதுக்குப் பேரு, நாகரீகமா?

யார் சொன்னது? நாகரீகம் வேறே, இந்தமாதிரியான நடவடிக்கைகள் வேறே......இந்த நடவடிக்கையிலே, எத்தனைபேர் ஈடுபடுவான்னு நினைக்கறீங்க......

ஐயாயிரம்பேர் இருக்காளாமே, இந்தச் சங்கத்திலே, இங்கிலாந்திலே......

சரி, இங்கிலாந்து நாட்டிலே, உள்ள ஜனங்களோட தொகை எவ்வளவு? அதிலே, இந்தச் சங்கத்துக்காரர், பதினாயிரத்திலே ஒண்ணுன்னுகூடச் சொல்லமுடியாதே. அதனாலே, அந்த நாட்டிலேயே, அவசரபுத்திக்காரர்கள் தவிர, பெருவாரியான மக்கள் சிந்திக்கல்லேன்னு தெரியுதல்லவா...... பைத்யக்காரத்தனம் இது; நாகரீகத்தின் பேராலே, ஏற்படுத்திக் கொண்ட, பைத்யக்காரத்தனம்...

அதனாலேதான், பொன்னி! எனக்கு, நீ பேசுகிற நாகரீகத்தின் பேரிலேயே அருவருப்பாக்கூட இருக்குது......நாகரீகம்னு பேசிப் பேசித்தானே, இந்த ஆபாசச் சேஷ்டையைச் செய்துகொண்டிருக்கிறாங்க...சில பேராகிலும்...

நாகரீகத்தின் பேராலே, மட்டுந்தானு ஆபாசமும் அருவருக்கத்தக்க காரியமும் நடக்குது. மதத்தின் பேராலேகூடத்தான் நடக்குது......

அதென்னடிம்மா, புதுக்கரடியை அவிழ்த்துவிடறே......

நானா? எனக்கென்ன அதுதான் வேலையா? நடப்பதைச் சொல்றேன் ......பெரியபாளையம்னு ஒரு ஊர் இருக்குது......

ஓஹோ! வேப்பஞ்சேலையைச் சொல்லபோறயா...

மனோன்மணிக்கும் தெரியுமா, நீ சொல்லப்போற விஷயம்.

ஆமாம், நான் பார்த்தே இருக்கறனே, சின்னப்பெண்ணா இருக்கும்போது......

பெரியபாளையத்து அம்மனுக்கு, வேண்டிக்கொள்கிறாங்க—வேப்பஞ்சேலை கட்டிக்கொண்டு வந்து, கோயிலைச் சுத்துகிறேன்னு... அதுஎப்படின்னு, பெண்கள், துணிமணி எல்லாம் கட்டக்கூடாது......வேப்பிலையைக் கோர்த்துக்கொடுப்பாங்க, அதைத்தான் உடலிலே சுத்திக்கொள்ளணும்...

அந்தக் கோயிலுக்குப் போகிறவர்களெல்லாமா......?

இல்லே, இல்லே. அந்தவிதமான பிரார்த்தனை செய்துகொண்டவங்க மட்டும்தான். யாரு...பட்டுவா! வா! வா! பெரியபாளையத்தைப்பத்திச் சொல்லிக்கொண்டிருக்கறேன்,

பாளையம்னு, நகரமுமல்ல, கிராமமுமல்ல; அப்படித்தானே...

இது, அம்மன் கோயில் இருக்கற ஒரு க்ஷேத்திரம்.

அப்படியா...நான் பாளையக்காரர்கள் காலத்தைப்பத்தி எண்ணிக்கொண்டேன். பாளையக்காரர்கள் காலத்திலே, அவர்கள்வைத்தது தான் சட்டம். வழக்கு விசாரணை ஒன்று கிடையாது. தப்புச்செய்தவன் கிடைச்சா, புளியமரத்திலே கட்டிவைத்து அடிப்பார்களாம்....

பட்டு! உன் சட்டப் பிரச்சினையைப் பிறகு கேட்கலாம். நீ, சொல்லு பொன்னி! பட்டு! இது வேப்ப மரத்து விவகாரம், புளிய மரமல்ல......

வேப்பமரம் என்று நாம் இவ்வளவு அலட்சியமாகப் பேசுறோம். அந்த மரத்திலே இருக்கிற ஒவ்வொரு பாகமும், மருந்து— அபூர்வமான மருந்து.

ஆமாம், சஞ்சீவின்னுதானே, சொல்லுவா, வேப்ப மரத்தை நோய் நொடியும் அண்டாது, காத்து கருப்பும் தீண்டாது......

அது என்ன? காத்திலேபேய் ஒரு கருப்புக் காத்து......

போடி பைத்யமே! காத்து கருப்பு என்று, பேய் பிசாசுக்குப் பெரியவங்க பெயர் வைத்திருக்கிறுங்க......

வேப்ப மரம், இலுப்ப மரம், புங்க மரம், பூவரசு....இப்படி எத்தனை எத்தனையோ, மரங்கள் இருக்கிறது நம்ம நாட்டிலே. பல நோய்களைத் தீர்த்து வைக்க, மருந்து தயாரிக்கலாம்.

மரம் மட்டுமா......மூலிகைகளே இருக்குதே, ஏராளமா.

தெற்கே ஏதோ ஒரு மலையே இருக்குதாம், மூலிகைகளுக்காகவே......

தீராத கண் வலியைத் தீர்த்து விடத்தக்க பச்சிலை ஒன்று இருக்குது, நம்ம நாட்டிலே. இங்கிலாந்து நாட்டு மகாராணி எலிசபெத் இங்கே வருகிறபோது, அந்தப் பச்சிலையைத் தரப்போகிறார்களாம்......

நம்ம நாட்டு மூலிகைகளை வகைப்படுத்தி, நல்ல பக்குவமான முறையிலே, மருந்து வகைகள் தயாரிக்கலாம். அதற்காக ஒரு ஆராய்ச்சிக் குழு செயல்பட வேண்டும் என்று மதுரை கருமுத்து, தியாகராஜ செட்டியார் என்பவர், பேசியிருக்கிறாரே, பார்த்தயோ, பேப்பர்லே.

ஆமாம், பார்த்தேன். நல்ல யோசனைதான்...

அதுசரி, அவர் என்னமோ மில்காரர்னு சொல்றாங்களே, அவருக்கு, மருந்து, மூலிகை, இதைப்பத்தி எல்லாம், என்ன தெரியும்?

தெரிந்துகொண்டுதான் பேசி இருக்கிறார். மேலும், பட்டு! நம்ம தமிழ் இலக்கியத்தை ஒழுங்கா, ஆர்வத்தோடு படிச்சா, மூலிகை, பச்சிலை இவைகளைப்பற்றிக்கூடத் தெளிவு கிடைக்கும். கருமுத்து, நல்ல தமிழார்வம் கொண்டவர்.

அப்படிச் சொல்லு. தமிழ் இலக்கியத்தைப் படிக்கும்போது, மூலிகைகள் விஷயமாவும் தகவல் கிடைத்திருக்கும்போல இருக்கு.

மூலிகைகளைப்பற்றி மட்டுந்தானா? புலவர்களிலேயே சிலர், மருத்துவர்களாக இருந்தனர். மருத்துவன் தாமோதரனார் என்று ஒரு புலவரின் பெயர்......

புலவர்களின் பெயர்கூட நமக்கு இப்போது தெரிவதில்லை... படித்துக்கொண்டு போகும்போதே, மறந்து போய் விடுகிறது...

அதுசரி, என்ன இது? வேப்பமரத்தை மறந்துவிட்டு, வேறே பக்கம் திரும்பிவிட்டாளே, பொன்னி!

ஆமாம்... மூலிகை என்றதும், கருமுத்துவின் கவனம் வந்தது. மதுரையிலே நிறையக் கல்விச்சாலைகள், அவர் நடத்துகிறார். பலவிதமான கல்விக்கூடங்கள். இனி விவசாயக் கல்லூரி ஒன்றுதான் அவர் துவக்கி நடத்தவேண்டியது பாக்கியாக நிற்கிறது.

அதுசரி, நீ, பேசவந்ததை, முடி

பெரியபாளையத்து அம்மனுக்குச் சிலர் பிரார்த்தனை செய்துகொண்டு, துணி கட்டாமல், வேப்பந்தழையைக் கோர்த்துக் கட்டிக்கொண்டு, கோயிலைச் சுற்றிவருவார்கள். பக்தி! நாகரீகத்தின் பேரிலே பழிபோட்டுவிட்டுச் சிலர், நிர்வாண சங்கம் நடத்துகிறார். பக்தியின் பெயராலே, நடக்கிறது, இந்த அலங்கோலம்.

பொன்னி! ஒரு கேள்வி. தெளிவா, பதில் சொல்லணும். பெரியபாளையம் கோயிலிலே, அல்லது அதற்கு அருகாமையிலே, மாடுகள் உண்டா?

பட்டு! இதென்ன கேள்வி. மாடு இல்லாமலா ஒரு ஊர் இருக்கும். கோயில்மாடுன்னுபழமொழியே இருக்குதே...

அப்படியானா, மாடுகள் உண்டு, என்பதற்குச் சாட்சியே தேவையில்லை. பொன்னி! ஒரு வழக்கு. ஏற்பட்டவிட்ட வழக்கல்ல; ஏற்படக்கூடும்!! சொல்லட்டுமா?

வழக்குன்னா, நீ நடத்திக்கொண்டு இருக்கறயா இப்ப.

இப்பவா? செச்சே! இல்லையே! கற்பனை வழக்கு! பெரியபாளையத்தம்மனுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு வேப்பஞ் சேலை கட்டிக்கொண்டு, கோயிலைச் சுத்திக்கொண்டிருக்கிறா, கண்ணம்மா.

அவ, யாருடி, கண்ணம்மா...

என் கட்சிக்காரி... அதாவது நான் ஜோடிக்கறேனே, வழக்கு அதிலே இவதான் முக்கியமானவ.

அதாவது, உன்னோட கற்பனை வழக்கிலே, கண்ணம்மாதான் குற்றவாளி......அப்படித்தானே...

அல்லவே அல்ல! குற்றவாளிகள் வேறு; முக்கியமாக மாடு, கோயில் தர்மகர்த்தா, இவர்கள். குறுக்கிடக்கூடாது, கேஸ் ஜோடிக்கும்போது....

வழக்குகளைப் பொய்யாகக்கூடக் கட்டுவது உண்டா? கட்டலாமா?

கட்டக்கூடாது — ஆனா கட்டுவது உண்டு. கண்ணம்மா கோயிலைச் சுற்றிக்கொண்டிருக்கிறாள், பயபக்தியுடன், வேப்பஞ் சேலை கட்டிக்கொண்டு. ஒரு புதிய, பெரிய, மோட்டார் வருகிறது. ஊது குழல் சத்தம் பிறிட்டுக்கொண்டு வருகிறது.

யாருடைய மோட்டார் வந்தது?

வேறு ஒரு பக்தர் வீட்டு மோடாராக இருக்கும்.

இல்லை, இல்லை. என்னைக் கேளுங்களேன். நீங்களாக ஏன், தப்பும் தவறுமா வழக்கை ஜோடிக்கணும்... சட்டம் தெரியாமல், வழக்கு ஜோடிக்க முடியுமா......சரி. மோடார் சத்தம் கேட்டதும், காளை மிரண்டுவிடுகிறது —கோயில் காளை--கண்ணம்மா இருக்கும் பக்கம் காளை செல்கிறது. அவளோ, வேப்பஞ் சேலை கட்டிக்கொண்டு, பயபக்தியுடன், கோயிலைச் சுற்றிக்கொண்டிருக்கிறாள். மாடு, இது பூஜை, பிரார்த்தனை என்று கண்டு கொள்ளமுடியுமா! அதன் கண்களுக்குப் பச்சென்று தெரிகிறது, வேப்பஞ் சேலை! உடனே, காளை கண்ணம்மா கட்டிக்கொண்டிருந்த வேப்பந்தழையைக் கவ்வி இழுக்கிறது, தின்ன. பலரும் பார்த்துவிட்டுச் சிரிக்கிறார்கள். மோடார்காரரின் முகம் சுளிக்கிறது. அவர், அருவருப்படைந்து, அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடுகிறார்.

அவரைப்பற்றி என்ன பட்டு! அவ்வளவு விவரம்.

காரணம் இல்லாமலா சொல்லுவேன். மோட்டாரில் வந்தாரே மைனர் மாசி, அவனைத்தான் பார்த்து வைத்திருந்தார்கள், கண்ணம்மாவுக்கு. புரிகிறதா, நிலைமை? தனக்கு மனைவியாக வரவேண்டிய பெண்; மாடு துரத்துகிறது அவளை; ஆடை இல்லை; இருப்பது; தழை! இதைக் கண்டு பலர் கேலியாகச் சிரிக்கிறார்கள். மைனர் தீவிரமாக யோசிக்கிறார். பலபேருடைய கேலிக்கு ஆளான பெண்ணைத் தன் மனைவியாக்கிக்கொள்வது மானக்குறைவு என்று எண்ணிக் கலியாணப் பேச்சையே மறந்துவிடுகிறார். இப்போது, மானநஷ்ட வழக்குப்போடும் கட்டம்! நான்தான், வழக்குத் தொடுக்கிறேன்.

இருடிம்மா, இரு! யார்மீது வழக்குத் தொடுக்கப்போறே?

ஏன்? கோயில் தர்மகர்த்தா மீது தான்!

அவர் என்ன செய்தார், அவர் பேரில் வழக்குத் தொடுக்க?

அவர் செய்ததற்காக அல்ல! செய்யாததற்காக — செய்திருக்கவேண்டியதைச் செய்யாததும், குற்றமாயிற்றே. கண்ணம்மா, பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட இருந்தா. பலர் பார்த்து அவளைக் கேலிசெய்யும் நிலைமை கண்டு, மாப்பிள்ளையாக வேண்டியவன், அவளை ஏற்க மறுத்துவிட்டான். அவளைக் கேலி செய்யும் நிலைமை எப்படி ஏற்பட்டது? ஆடைக்குப் பதிலாக அவள் சுற்றிக்கொண்டிருந்த வேப்பந்தழையைத் தின்பதற்காக மாடு இழுத்தது—அவள் அலங்கோலமானாள்—பலர், கைகொட்டிச் சிரித்தனர். மாடு, அப்படிச் செய்திராவிட்டால், கண்ணம்மாவுக்கு இந்த மானநஷ்டமே ஏற்பட்டிராது.

ஆமாம்! அதுசரி. அதற்கு, மாடு பேரில் அல்லவா, மானநஷ்ட வழக்குப் போடணும்? தருமகர்த்தா என்ன செய்வார்? அவர்மீது என்ன குற்றம்?

கோயிலிலே. உள்ள பூஜா முறை தர்மகர்த்தாவுக்குத் தெரியும். வேப்பந்தழையை ஆடையாகச் சுற்றிக்கொள்ளும் முறை.

ஆமாம், தெரியும்...... ஏண்டி பொன்னி! என்ன நீ, பட்டு பேசப் பேச வாயைப் பிளந்துகொண்டு கேட்டுக்கொண்டிருக்கிறயே குற்றம் செய்தது மாடுதானே! சொல்லேன்...

பட்டு, வழக்கை எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிற போதே, குற்றவாளி யார் என்று பட்டு சொல்லப் போருஎன்பது விளங்கிவிட்டதே. மாடு, தழை தின்னும் என்பது தர்மகர்த்தாவுக்குத் தெரியும். பெண்கள், தழையைச் சுற்றிக்கொண்டு, கோயிலைச் சுற்றுவார்கள் என்பதும் தெரியும். தழையைக் கண்டால், மாடு தாவும் என்பது தெரியாதா, தர்மகர்த்தாவுக்கு, அதனாலே அவர், மாடுகளை அங்கு திரியும்படி இடம் கொடுத்ததுதான், கண்ணம்மாவுக்கு மானக் குறைவு ஏற்பட்டதற்குக் காரணம். ஆகையால், தர்மகர்த்தாதான் குற்றவாளி!பட்டு! அதுதானே?

கச்சிதமான வாதம். பொன்னி! நீ, வீணு, சுயமரியாதைப் பிரசாரம் செய்துகொண்டு இருப்பதைவிட, வக்கிலாகிவிட்டே, ஊரே அமளிதுமளிப் படும்—பெரிய ஆசாமி ஆயிடுவே.

மாடு செய்த காரியத்துக்குமனுஷா பேரிலே வழக்குப் போட ஒரு சட்டம் இருக்குதா......?

வீடு செய்த காரியத்துக்கு வீட்டுச் சொந்தக்காரர் பேரிலே வழக்குப் போட்டிருக்காங்க. அரஸ்ட்டு ஆகி இருக்காங்க மூன்று பேர்; பம்பாயில்.

வீடு என்ன குற்றம் செய்தது?

இடிந்து விழுந்தது, ஐந்து பேர், செத்தனர் — இருபது பேருக்குக் காயம்—அறுநூறு பேர் இருக்கும் இடம் இழந்து, தெருவில் அலைகிறார்கள்.

அவர்கள் குடி இருந்த வீடா, அது?

ஆமாம்! ஐந்து அடுக்கு கட்டிடம்—பம்பாயில் — வாடகைக்காகவே கட்டப்படுவது, அந்தமாதிரி கட்டிடம்.

அது சரி. இவர்களைச் சாகடிக்கணும்னு, வீட்டை'சொந்தக்காரனே இடித்துத் தள்ளினுனு, என்ன?

பைத்யக்காரனல்லவா, அப்படிச் செய்வான். இவன் பைத்யக்காரன் அல்ல; பணக்காரன். வாடகை மட்டும் வாங்கி வாங்கிப் பணத்தைக் குவித்துக்கொண்டான் — ஆனு வீடு கலனுகிவிட்டிருந்தது, துளிகூடக் கவனிக்கல்லே... பழுது பார்க்கல்லே.

வாடகைக்கு இருக்கிறவங்க, சொல்லலியோ, வீட்டுக்காரனுக்கு கட்டிடம் கலனுகி இருப்பதை...

அவர்கள் மட்டுமா சொன்னுங்க... பம்பாய் கார்ப்பரேஷனே 'நோடீஸ்' கொடுத்ததே! வீடு உடனடியாகப், பழுதுபார்க்கப்படணும், இல்லையானு ஆபத்து என்று.

வீட்டுக்காரன், கவனிக்கவே இல்லை...

ஆமா! வீடு இடிந்து விழுந்தது. ஐந்து பேர் மாண்டார்கள். அதிலே பதினைந்து வயதிலே ஒரு பெண்கூடச் செத்துப்போயிருக்குது பாபம்! வேண்டுமென்றே, ஆபத்தான நிலைமையிலே கட்டிடத்தை வைத்துக்கொண்டு, வாடகைக்குவிட்டு, பணம் சம்பாதித்துக்கொண்டு, குடி இருந்தவர்களுக்கு ஆபத்து ஏற்படத்தக்க விதத்தில், எந்த நேரத்திலேயும் இடிந்து விழக்கூடியவிதத்தில் வீட்டை வைத்துக்கொண்டு இருந்தது, பெரிய குற்றம்! வழக்கு நடைபெறப்போகுது பாரேன்!

கேட்டுக்கொள்ளடிம்மா பொன்னி! பட்டுவோட வாதத்திறமையை...... கோர்ட்டு ஒத்துக்கொள்ளுதோ இல்லையோ, இப்ப நாம ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். மாடு செய்த குற்றத்துக்கு, தர்மகர்த்தாமீது வழக்கு.

பட்டு, கற்பனையாத் தொடுத்தது அந்த வழக்கு. ஆனல் உண்மையான குற்றவாளி, நம்முடைய புத்திகெட்ட தன்மைதானே! மதத்தின்பேர் கூறிக்கொண்டு, மதி இழந்து போனதுதான் முதல் குற்றம்! இதற்கு நாம், யார் மீது வழக்குப்போடவேண்டும்? பட்டு! உன், சட்டப் புத்தகத்திலே இதைக் குறித்து ஏதாவது சொல்லி இருக்குதா?

இதைப்பத்தி ஒண்ணும் இல்லை. ஆனு உன்னைப்போல் சுயமரியாதைக்காரர்கள் பிரசாரம் செய்கிறபோது, மதத்தை இழிவுபடுத்தினு, மதமாச்சரியம் உண்டாகும்படி பேசினு ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் பகை ஏற்படுகிறமாதிரி பேசினு, என்னென்ன செக்ஷன்களிலே வழக்குத் தொடுக்கலாம் என்பது நிறைய இருக்குது...

இருக்கும்-இருக்கும். பழமையான ஏற்பாடுகளை எல்லாம் அப்படியே காப்பாற்றவும், சொத்து உள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தானே, சட்டமே உருவாகியிருக்குது.

என்ன சொத்தோ, சுகமோ! அவாளவா போகிறபோது சொத்தை மூட்டை கட்டித் தலைமேலே வைத்துக்கொண்டா போகப்போரு.

பழய காலத்திலே எகிப்து நாட்டு 'அரசர்கள்' சொத்துச் சேர்த்து, அதைச் சாகும்போது தங்களுடனேயே எடுத்துக்கொண்டு போவது தான் வாடிக்கை...

பொன்னி! அது என்ன விந்தை?

விந்தை அதுமட்டுமா? அந்தஅரசர்கள், தங்களுக்கு என்று சமாதி; பெரிய அளவிலே கூடம் மாடம் உள் அறை, சுரங்கம் இத்தனையும்கொண்டதாகக் கட்டிக்கொள்வார்கள்...

உயிரோடு இருக்கும்போதே,சமாதி கட்டுவதா?

ஆமாம்! செத்தபிறகு மற்றவர்கள், சிறப்பாகக் கட்டுவார்கள் என்பதற்கு என்ன உறுதி? அதனுல், அவர்கள் பெரும்பணம் செலவு செய்து சமாதி கட்டுவார்கள். அதிலே, தங்களுக்குக் கிடைக்கும் விலையுயர்ந்த அணிபணிமணிகள், ஆகியவற்றைக் குவித்துவைப்பார்கள்.

சமாதிக்கு உள்ளேயா, இதெல்லாம்?

ஆமாம்! விதவிதமான படுக்கைகள் துணிமணி, குளிக்கும் ஏற்பாடு, சாப்பாட்டு வட்டில்கள், தந்தச் சாமான்கள், தங்கக் கட்டில்கள், வாசனைப் பொருள்கள், இவ்வளவும், புதைகுழியில் சேர்த்துவைப்பார்கள். செத்ததும் புதை குழியில் பிணத்தைக்கொண்டு போய் வைப்பார்கள்......

அப்போது வெளியே கொண்டு வந்துவிடுவார்களா, புதை குழியில் இருக்கும் செல்வத்தை?

தொடக்கூட மாட்டார்கள்; பாபமாயிற்றே. இறந்தவன், மீண்டும் எழுந்து, மேல் உலகம் செல்கிறுன், வாழ! இரண்டாவது வாழ்க்கை. அப்போது அவனுக்கு அவனுடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி பொருள் இருக்கவேண்டுமே... அதற்கு இது...

அப்படியானு, பொன்னி! ஏகப்பட்ட செல்வம், இப்பவும் இருக்க வேண்டுமே, இந்தப் புதை குழிகளிலே.

ஆமாம்! அதனுலேதான்; இப்பகூட ஒரு புதை குழியைத் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள், செல்வம் இருக்கும் என்பதற்காக. முன்பு ஒரு முறை, பெரிய புதையல் கிடைத்திருக்கிறது.

நம்ம நாட்டிலே, இதுபோலப் புதையல் அதிகம் கிடைப்பது இல்லையே......?

புதையல் கிடைப்பது உண்டு சமாதியில் இருக்காது. மேலும், நம்ம நாட்டிலே, பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானிடரே! என்று முன்பே கண்டித்து வைத்திருக்கிறார்கள்.

புதையல் கிடைத்தா, சட்டம் என்ன சொல்லுது தெரியுமோ......

எங்களுக்கு என்ன தெரியும்! நாங்க என்ன, உன்னைப்போல வக்கிலா?

(12-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

20-11-60.

## தம்பி!

மன்னனைக்காணப் பலர் வரக்கூடும்; இளவரசர்கள், தளபதிகள், வணிகக் கோமான்கள், கலைவல்லோர், மார்க்கத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இப்படிப்பலர். இவர்கள் ஒவ்வொருவருக்கும், மன்னனைக் காண்பது, அவருடன உரையாடுவது என்பதிலே, ஒவ்வொரு முறை இருக்கும். கொலுமண்டபம், கோட்டை வெளி, விழாமன்றம், களியாட்டக்கூடம், கானற்றுப்பக்கம் எனும் பல்வேறு அரங்கங்களில், மன்னனுடன் செல்வோர், அல்லது வந்து காண்போர், என்ன முறையில் வரவேற்கப்படுவர், எங்கு இடம் பெறுவர், என்பதற்கெல்லாம், கட்டுத்திட்டம் உண்டு; அது துளியும் கெடாதபடி பார்த்துக்கொள்வார்கள்; கெடவிடின், மன்னன், தன்நிலை அறியாது தடுமாறினன் என்று கேலி பேசுவர், கண்டிக்கக்கூடச் செய்வர்.

இங்கு வர இருக்கும் பிரிட்டிஷ் பேரரசிக்கு மணாளனாக இருப்பவர் வேறோர் நாட்டு அரச குடும்பத்தவர் எனினும், அரசர் அல்ல! பேரரசியுடன் அவர் செல்கிறார், பல நாடுகளுக்கு; பேரரசிக்குக் காட்டப்படும் சில தனிச் சிறப்புகள் இவருக்குக் கிடையாது; பெற இயலாது; கேட்கவும் மாட்டார். நாட்டுக்கு மட்டுமல்ல, நாயகனுக்கும், அவர் பேரரசி!

பேரரசியின் பாராளுமன்றத் துவக்கஉரை நிகழ்ந்தபோது, பேரரசியின் தங்கை, அவையில், அரச குடும்பத்தினருக்கு என்றுள்ள இருக்கையில் காணப்படவில்லை. காரணம் என்ன என்று இதழ்கள் விளக்கின. ஒரு இதழ், உண்மையான காரணம், அவர் மட்டும்தான், அரச குடும்பத்தினர் இருக்கையில் அமரலாமேயொழிய, பக்கத்தில் கணவன் அமரமுடியாது; ஏனெனில், அவர் அரச குடும்பத்தவர் அல்ல; தனக்கு ஒரு இடம், மணாளனுக்கு மற்றோர் இடம் என்று இருப்பதை விரும்பாததாலேயே அரச குமாரி, பாராளுமன்ற விழாவில் கலந்துகொள்ளவில்லை, என்று எழுதிற்று. இது இந்த ஆண்டு!!

இங்கு வர இருக்கிறாரே எலிசபத் பேரரசி, அவர், புலிவேட்டை காணப்போகிறார்; காணமட்டுமே! புலிவேட்டை ஆடப்போவதோ, பேரரசியின் கணவர்.

தம்பி! பேரரசி, புலிவேட்டை ஆடுவது கூடாது; தரக்குறைவான செயல்! அவர் கணவர், வேட்டை ஆடலாம், அவருக்கு உள்ள நிலையின் அளவு அது! ஏன் இந்த வித்தியாசம் என்று வியப்பாக இருக்கிறதா? இதிலென்ன, தம்பி! வியப்பு?

# எல்லோரும் இந்நாட்டு மன்னர் [4]

உண்மையாக நீ வியப்புறவேண்டியது எதை அறிந்து தெரியுமா? பேரரசியின் கணவன் பேரரசன் அல்ல! பேரரசனின் மனைவி பேரரசி ஆகலாம்!!

இத்தகைய சில தனிச் சிறப்புகள், இன்றும், அரசர்களுக்கு உள்ளன; மக்களும், இந்தச் சிறப்புகளைத் தருவதிலே தயக்கம் காட்டுவதில்லை; மன்னன் உலா, விழாபோல் இருக்கலாம் என்கின்றனர் மக்கள்; விழாவில் களிப்புப் பெறுகின்றனர்! மன்னன், கண்ணைக் கவரும் வனப்பு அளித்திடும் அணிபணி பூண்டிடலாம், மக்கள் அதனை அனுமதிக்கின்றனர்! கண்டு அகமகிழ்கின்றனர்; ஆனால், மன்னன், ஆட்சிப் பொறுப்பு அத்தனையும் வேண்டுமென்று கேட்டாலோ மறுக்கின்றனர்; உமக்கு எது நல்லது என்பது, எமக்கன்றோ தெரியும் என்று மன்னன் பேசிடின், அதனை மமதை என்கின்றனர் மக்கள்!!

பிடி யாராரிடமோ உளது, முடிமட்டும் நம் தலையில்! அரசன் என்று விருது இருக்கிறது, ஆட்சியோ நம் விருப்பப்படி இல்லை! அரண்மனை இருக்கிறது பெரிதாக, ஆனால் அது சிங்காரச் சிறைக்கூடம் போலாக்கப்படுகிறது! இந்நிலையில், அரசர்க்கான உடையும் முடியும் வெறும் சுமையாகிறது. பொன்னால் சமைக்கப்பட்டு நவமணிகள் இழைக்கப்பட்ட, 'சிம்மாசனம்,' எந்தச் சமயத்திலும் கடித்திடத் தயாராக இருக்கும் 'சர்ப்பாசனம்' போலாகிறது! இந்நிலையில், மன்னன் என்று இருப்பதைவிடக் குடிமகனாக இருப்பது மேல்! மன்னன், குடிமகனை, எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற முறை முறிந்து போய்விட்டது. குடிமகன், இன்று மன்னனை, எப்படி எப்படிக் காணவேண்டும் என்று எண்ணுகிறானோ, அதுபோல் ஆக்கிவிடமுடிகிறது. இந்நிலையில், குடிமகனாக இருப்பது கோலேந்தியாக இருப்பதைக் காட்டிலும், எத்துணையோ மடங்கு மேலானது, என்று எண்ணிக்கிடந்திடும், மன்னர்களும் உளர்.

இவ்விதமான எண்ணம்கொண்ட மன்னனைத்தான் தம்பி! நாம் காணப் புறப்பட்டோம்.

அதோ பார்! ஏறு நடை! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசக்கூடியவர் என்பதை எடுத்துக்காட்டிடும் பார்வை. கண்டவர், தன் நிலை உயர்ந்தது என்பதை அறியவேண்டும் என்ற நோக்குடன், உடை அலங்காரம். ஆதிக்கக்காரருக்கு அடிபணிபவன் நான் அல்ல; நான் புரட்சி நோக்குடையவன் என்பதை எடுத்துக்காட்டும், சிகப்பு அங்கி. இவர் ஓர் அமைச்சர்! புதிதாக அமைச்சரானவர்!

அமைச்சரானேன், என்கிறார் இவர்.

அமைச்சர் ஆக்கினேன் என்பார், முதலமைச்சர்.

இவர், வணிகக் கோட்டத் துறைக்குத் தலைமை ஏற்றிருக்கும் அமைச்சர். பேரறிஞர் பெர்னார்டுஷா, இந்த அமைச்சருக்கு போனார்ஜிஸ் என்று பெயரிட்டிருக்கிறார்.

தம்பி! நான், நமது வசதிக்காக, இந்த அமைச்சரை, புயலார் என்று அழைக்கிறேன். இந்த அமைச்சர், தமது அறிவாற்றலால், புரட்சிப் போக்கினால், முடி அரசு முறையையே வீழ்த்தத்தக்க புயல் கிளப்பிவிடுவதாக எண்ணுபவர்; எனவே, இவருக்குப் புயலார் எனும் பெயர் ஒருவகையில் பொருத்தமானதுங்கூட.

அமைச்சர் அவையில் இடம் பெறுமுன், இவர், பொறிபறக்கப் பேசியும் புதுப்புது திட்டங்களைத் தீட்டியும், ஆட்சிமுறையிலே மதமதப்பு ஏற்பட்டுவிட்டது என்று கடிந்துரைத்தும், மன்னராட்சி முறை உள்ளமட்டும், மக்களாட்சி மலராது என்று விளக்கியும், முடிதரிப்போரே இருத்தல் ஆகாது, முழுக்க முழுக்கக் குடிஅரசு ஏற்பட்டாக வேண்டும் என்று முழக்கமிட்டும், 'பெரிய புள்ளி' ஆனவர்; "புயலார்" ஆனவர்!

அவருக்கு அமைச்சர் அவையில் இடம் தரப்பட்டது.

புதிய அமைச்சர் மன்னனைக் காணவருகிறார்.

மன்னனைக் காணவந்திருக்கிறேன்—என்று புயலார், கூறிடும்போது, அச்சொல் கேட்டதும் அலுவலர்கள் அஞ்சி நடுநடுங்கி, ஐயனே! அமருவீர்! இதோ அரைநொடியில் அரசனை அழைத்துவருகிறோம்! — என்று கூறிவிட்டு, ஓடோடிச் சென்று, அரசனை அழைத்து வருவர், என்று எண்ணிக்கொண்டிருந்திருக்கக்கூடும். ஏனெனில், மன்னர்களைப் பேட்டிகாணச் செல்வது பேதமை என்றும், மக்களின் தலைவர்களை மன்னர்கள் காத்திருக்கச் செய்வது கொடுமை என்றும், அந்த முறையை வாழ விடுவது மடைமை என்றும், சந்தைத் திடலில், அவர், எத்தனையோ முறை முழக்கமிட்டிருப்பார், அப்படிப்பட்டவர், அமைச்சர் என்ற நிலையைப் பெற்று மன்னனைக் காணவந்திருக்கிறார் — மதியிலிகள், அவரை, ஊர் என்ன? பேர் என்ன? உற்ற குறையாது? என்று கேட்கிறார்கள்—அவ்விதம் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டதால்!! புயலார் கோபம் கொள்ளாமலிருந்திருக்கமுடியுமா.

கேட்பதென்ன, காத்திருப்பதென்ன! வந்தது மன்னனைக்காண — காணச் செல்வோம்!! — என்று எண்ணிக்கொண்டார் போலிருக்கிறது, உள்ளே நுழைந்தார், மன்னனுக்கு அனுப்பப்படும் மடல்களைக் கவனிக்கும் அலுவலர் இருவர் கண்டனர்; அவர்களில் ஒருவன், வந்தவர் யார் எனக்கண்டுகொண்டான். அவர் போக்கும் நோக்கமும் தெரிந்தவன் என்ற முறையில், பேசினான்.

"வருக! அமைச்சரே! வருக! தாங்கள் அமைச்சரானதற்காகத் தங்களை நான் வாழ்த்துகிறேன்...... இல்லை, இல்லை, தங்களைப் பெற்றதற்காக, அமைச்சர் அவையை வாழ்த்துகிறேன்!"

பொல்லாதவன் இந்த இளைஞன். முடி அரசனோ, குடி அரசுக் கொள்கையுடையோனோ, எவனாயினும், புகழ்மொழி கேட்டால், மயங்கிப்போவர், என்ற உண்மையை உணர்ந்து, புயலாரிடமே, அந்த வித்தையைக் காட்டுகிறான். மன்னர்களாகிலும், பலருடைய புகழுரையைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போயிருப்பர்! எனவே அவர்கள், தம்மைப் புகழ்பவர்களின் எண்ணிக்கை வளர வளர, ஓரளவு சலிப்புணர்ச்சிகூடக் கொள்ளக்கூடும். புயலார் போன்றவர்கள் அவ்விதம் அல்லவே! அங்காடியிலும் ஆற்றோரத் திடலிலும், முச்சந்தியிலும் மன்றங்களிலும், பாராட்டுரைகளைப் பெற்றிருப்பர். இது அரண்மனை! எந்த அரண்மனையைச் சுட்டிக் காட்டிக் காட்டி, ஆணவம் குடிகொண்ட இடம்! அக்ரமம் கொலு இருக்கும்கூடம்! என்றெல்லாம் கண்டித்துப்பேசி இருக்கிறானோ, அதே அரண்மனை. அங்கு அவன் நுழைகிறான், மன்னனைக்காண, அமைச்சர் என்ற நிலை பெற்று! அந்த இடத்தில், தன்னைப் புகழ்கிறார்கள் என்றால், உச்சி குளிர்ந்திடத்தானே செய்யும்.

மன்னர்! என்று இளைஞர்களில் ஒருவன் அறிவிக்கிறான்.

உட்கார்ந்திருக்கும் புயலார், இருக்கையில் இருந்தபடியே, கதவுப்பக்கம் திரும்பிப் பார்க்கிறார்—எழுந்திருக்கவில்லை.

மன்னன் வருகிறார் என்ற உடன், எழுந்து நின்றால், செ! தன்மானத்தை, இழந்துவிடும் செயலாகி விடாதா! ஓ! பயல், நம்மைக்கண்டதும் மரியாதை காட்டுகிறான் என்று மன்னன் எண்ணிக்கொண்டுவிடுவானே! நாடு, நமது கட்டளைக்காகக் காத்துக்கிடக்கிறது. நமது அறிவாற்றல் இந்த அரசையே ஆட்டிப் படைக்கிறது—அப்படிப்பட்ட நாம், கேவலம், ஒரு முடிதாங்கியைக்கண்டு, எழுந்து நிற்பதா? கூடாது. கூடவே கூடாது. நாம் உட்கார்ந்தபடி இருந்தால் தான், நமது நிலையின் உயர்வு தெரியும், தரம் புரியும், குடி அரசுக் கோட்பாட்டுக்கு ஏற்றம் ஏற்படும், என்றெல்லாம் புயலார் எண்ணிக்கொண்டிருந்திருக்கக் கூடும்.

நாற்பத்தைந்து வயதிருக்கும் மன்னனுக்கு; நல்ல உயரம்; அறிவாளி என்பதைக் காட்டிடும் தோற்றம். கனிவுடன், கரங்களை நீட்டியபடி, புயலாரை நோக்கி வருகிறார்.

மன்:- என் சிறிய அரண்மனைக்கு வந்திருக்கிறீர்—நல்வரவேற்பு, புயலாரே! அமருங்களேன்!!

[மன்னன், அமைச்சருக்குத் தரவேண்டிய உரிய மதிப்பைத் தரவேண்டி, வரவேற்பு கூறுகிறான். மன்னனைக் காண வருபவர்கள். மன்னனைக் கண்டதும் எழுந்து நிற்பது வாடிக்கையாக இருந்துவரும் மரியாதை முறை; அங்ஙனம் நிற்பவரை, அமருக! என்று அன்புடன் மன்னன் கூறுவதும் மரியாதை முறைகளிலே ஒன்று.

மன்னன், தனக்கென்று இருந்துவரும் மரியாதை முறைப்படி, அமைச்சரை வரவேற்றபடி, அமருக! என்று கூறினார். அமைச்சர்தான், வழக்கமான மரியாதை முறையைக் கையாள்வது தன் நிலைமையைக் குறைத்துவிடும், தாழ்வு மனப்பான்மையைக் காட்டும் என்று கருதி, எழுந்திருக்கவேயில்லையே. அதைக் கவனித்துவிட்டதாகக்கூட, மன்னன் காட்டிக்கொள்ளவில்லை. வழக்கமான மரியாதை முறை இருப்பதுபோலவே கருதிக்கொண்டு, அமருக! என்கிறார்.]

அமை:- நான் அமர்ந்துகொண்டுதான் இருக்கிறேன்.

மன்:- உண்மை, புயலாரே! நான் அதைக் கவனிக்கவில்லை. மன்னித்துக்கொள்க! அமருக! என்று கூறிவிட்டேன்!! பழக்கம் அப்படி!

[தம்பி! மன்னன், எப்படிப்பட்டவன் என்பதை எடுத்துக்காட்ட இந்த ஒரு பேச்சு போதும் என்று கூறலாம்.

தேவையற்ற திமிர் என்றுதான், தெளிவுள்ள எவரும் கூறுவர், சாதாரண, வழக்கமான, மரியாதையைக் காட்டக்கூட மறுத்திட்ட, அமைச்சரின் போக்கை.

ஆனால் அதைக் கண்டும் காணாதது போலிருந்துவிட்டது மன்னனுடைய பெருந்தன்மையை மட்டுமல்ல, அவனுக்கு உள்ள 'எடை போடும்' திறமையையும் நன்கு காட்டுகிறது.

ஆணவம் தலைக்கேறிவிட்ட நிலை இவனுக்கு; எனவேதான், கஷ்டமோ நஷ்டமோ தராத, மிக மிகச் சாதாரணமான மரியாதை முறையைக்கூட கைக்கொள்ளாதிருக்கிறான். இத்தனை முடுக்கும், முறிவுக்குத்தான் வழி அமைக்கும்!

இவன், கொந்தளிக்கும் உள்ளம் கொண்டவனேயொழிய, நின்று நிதானித்து, காரியமாற்றி, நீங்காப் புகழ் பெறும் வாய்ப்பினைத் தேடிக்கொள்பவனல்ல. எனவே இவன், நாம், கவனிக்கத்தக்க பகைவன் அல்ல! என்றுதான், மன்னன் எண்ணிக்கொண்டிருந்திருப்பான்.

அமருக! என்று கூறினேன், அட அறிவிலி! மன்னர்கள் அங்ஙனம் கூறுவது முறை! அதற்குப் பிறகு அமருவதே, பழக்கமாக இருந்து வருகிறது! என்று, மன்னன் கடிந்துரைக்கவில்லை. மாறாக, மன்னித்தருள்க, பழக்கத்தால் அங்ஙனம் கூறிவிட்டேன், என்று பேசினான.

இங்கு அனேகர் வருகின்றனர், புயலாரே! அவர்கள் நான் நின்றுகொண்டிருக்கும்போது அமர்ந்துகொண்டிருக்கமாட்டார்கள்! அது பண்பு அல்ல என்பதால்! அவர்கள் நின்றுகொண்டிருக்க, நான் அமருவதும், பண்பு அல்ல! எனவேதான், நான், அமருக! என்று கூறுவது வழக்கம். இங்கு எப்போதும் போலத்தான், முறை தெரிந்தவர்கள், மரியாதை அறிந்தவர்கள், பண்பு புரிந்தவர்கள் வந்திருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டு வந்தேன். அவ்விதம் நான் எண்ணிக்கொண்டதால்தான், வந்தவர் நின்றுகொண்டுதானே இருப்பார் என்ற நினைப்பில், அமருக! என்றேன். பண்புடன் நடந்துகொள்வோருக்கு, நான் காட்டும் மரியாதை அது. தங்களுக்கு அது தேவை இல்லை என்பதை அறியாது போனேன—அமருக! என்று கூறியதற்காக மன்னித்திடுக!—என்றன்றோ, கூறுகிறான் கொற்றவன்!!]

இதற்குள், அலுவலர், ஓர் நாற்காலியை, புயலாருக்குப் பக்கத்தில் போடுகிறார்—மன்னன் காட்டிய குறி கண்டு.

பண்பற்று, நீ நடந்துகொண்டாலும், நான் அங்ஙனம் நடந்துகொள்ளமாட்டேன், என்று இடித்துரைப்பதுபோல, மன்னன், புயலாரைப் பார்த்து,

"என்னை உட்கார அனுமதிக்கிறீர்களா?"—என்று கேட்கிறார்.

மன்னன் பாடம் புகட்டக் கையாண்ட நேர்த்தியான இந்த முறை, அமைச்சர் புயலாருக்கு, புரிந்ததாகத் தெரியவில்லை. அவருக்கு இருந்த எண்ணமெல்லாம் ஒருவன் மன்னன் என்பதற்காக, நான் ஒரு தனி மரியாதையும் காட்டி என்னைத் தாழ்த்திக்கொள்ளமாட்டேன் என்பதுதான். எனவே, அமைச்சர்,

"அட உட்கார் ஐயா! உட்கார்! உன் வீட்டில்தானே நீ இருக்கிறாய்.

எனக்கு இந்தச் சம்பிரதாய உபசார முறைகள் கட்டோடு பிடிக்காது

என்றுதான்-பேச முடிகிறது.

மன்னனைக் காணச்சென்றேன்! நானென்ன, மற்ற மற்றவர்களைப்போல, நோஞ்சானா!! பல்லிளிக்கும் பேர்வழியா! மன்னன் அவன் என்றால், நான் மக்களின் தலைவன்! மன்னர்களின் மணிமுடியைப் பறித்தெடுத்து பந்தாடக்கூட உரிமையும் வலிமையும்

பெற்றவன். வந்தான் மன்னன். அவனிடம் கூலி வாங்கிக்கொண்டு கிடக்கும் பயல்கள், மன்னர்! மன்னர்! என்று பயபக்தியுடன் கூறினர். அந்தச் சொல்லைக் கேட்ட உடனே, நான் நடுநடுங்கிப் போவேன், கூப்பிய கரத்துடன் நிற்பேன், என்று எண்ணிக்கொண்டார்கள் போலிருக்கிறது. நானா, என்னைவிட ஒருவன் மேலானவன் என்பதை ஏற்றுக் கொள்வேன். என் வீரதீரம் எத்தகையது. அறிவாற்றல் எத்துணை சிறப்பானது! நான் மக்கள் தலைவன்! இவன் மன்னன்!! இவனைக்கண்டு நான் எழுந்திருக்கவில்லை, உட்கார்ந்தபடியேதான் இருந்தேன். மன்னன் திருதிருவென்று விழித்தான். கோபம் கொண்டு ஏதாகிலும் கேட்பான், செம்மையாகக் கொடுக்கலாம் என்று இருந்தேன். கோழை, வாயைத் திறந்தானில்லை. குழைந்து குழைந்து பேசினான்.—என்று பொறிபறக்கப் பேசிடுவார் நமது மாசற்ற தலைவர் என்று புகழ்பாடிடும் கூட்டத்தினர் முன்பு புயலார். அவ்வளவே! வேறு உருவான, சுவையான, பயன் தரும் விளைவு எதுவும் ஏற்படாது, பண்பு மறந்த அந்தச் செயலால். மன்னன் 'எடைபோட்டு' இதனை அறிந்துகொண்டான்.

> இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தாங்கள் தேர்தலில் ஈடுபட்டீர்களே, அப்போதிருந்தே நான் தங்கள் அரசியல் வாழ்க்கையைக் கவனித்து வந்திருக்கிறேன். இப்போது தங்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது.

காரணமற்ற மண்டைக்கனம் காட்டும் இந்த அமைச்சன், இரண்டொரு புகழுரைகளைப் பெற்றாலே, புத்தி தடுமாறி நிற்பான் என்பதைப் புரிந்துகொண்டு மட்டும், மன்னன் இதுபோலப் பேசினான் என்று கொள்வதற்கில்லை.

அரசுகளை ஆட்டிப்படைக்கும் ஆற்றல்பெற்றிருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவனே, நான் உன் போன்றவர்களின் நடவடிக்கைகளை அறிந்துவைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஏதுமறியாதவன் என்று என்னை எண்ணிக்கொள்ளாதே. முடிதாங்கியாக மட்டுமே இருக்கிறேன் என்று எண்ணிவிடாதே. நான், நாட்டிலே கிளம்பிடும் நானாவிதமான சுழல்களையும் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கிறேன்— எனவே, நிலைமையை அறிந்து நடந்துகொள்ளக் கூடியவன், அப்படிப்பட்ட என்னை வீழ்த்துவது எளிதான செயலல்ல என்பதைத் தெரிந்துகொள்— என்று கூறுமற் கூறுகிறான் மன்னன்!

இன்று அமைச்சனாகி அரண்மனைக்கு வந்திருக்கிறாய், என்னைக்காண! என்னைக்காண வந்திருக்கும் போதே என்னை அவமானப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு உன் சிறுமைக் குணத்தைத்தான் காட்டி விட்டாய். இந்த அளவு உயர, இந்த நிலைபெற, இந்த இடம் பிடிக்க, நீ எத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டு வந்திருக்கிறாய், என்னென்ன கரணம், எத்துணை 'கூட்டு'—யாராருடைய 'தயவு'—இவைகளைத் துணை கொண்டு, வளர்ந்திருக்கிறாய். இந்த வளர்ச்சியைக் காண, இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் உழன்று வந்திருக்கிறாய்—தெரியும் எனக்கு!!—என்று கேலிக் கசையடி அல்லவா தருகிறான் காவலன்.

இந்த உட்கருத்தினை அமைச்சர் கவனித்ததாகத் தெரியவில்லை. மன்னன், இருபத்தைந்து ஆண்டுகளாகவே, தன்னைக் கவனித்து வந்திருப்பதாகக் கூறினார். அவ்வளவு பெருமதிப்பு நம்மிடம் மன்னருக்கு! நம்முடைய தரத்தையும் திறத்தையும் மன்னர் போற்றுகிறார்! புகழ்கிறார்!!—என்று மட்டுமே எண்ணிக்கொள்ள முடிகிறது அமைச்சனால். அவ்வளவுதான் முடிகிறது. மகிழ்ச்சியுடன், தன் பெருமையைத் தம்பட்டமடித்துக்கொள்கிறான்.

> ஆமாம் அரசே! கவனித்திருப்பீர். இரண்டொரு முறையாவது, நான் உங்களை உலுக்கிவிட்டிருப்பேன், அல்லவா!

என்று கூறுகிறான். புரட்சிவீரன், அவன் சொல், மன்னனை உலுக்கிவிட்டதாம்!

புன்னகை புரிகிறான் மன்னன். புகழ்மொழி, இந்த புரட்சி வீரனை பூப்பந்தாக்கிவிடும் என்பது மன்னனுக்கு விளங்கிவிடுகிறது. அதே வழியில், அவனை இழுத்துச்செல்ல விரும்புகிறான். உலுக்கிவிட்டிருக்கிறேன் என்றுமட்டும்தானே கூறினான் அமைச்சன்; அரசன் மேலும் ஒருபடி சென்று,

> "தங்கள் முழக்கம், என் சிம்மாசனத்தையே பலமுறை ஆட்டிச்செய்து விட்டிருக்கிறதே!"

என்று கூறுகிறான். இந்தப் புகழ்மொழி, அமைச்சருக்கு போதையேறச் செய்துவிடுகிறது. மன்னனிடம் தனித்திருந்து பேசவேண்டும்; மனம்விட்டுப் பேச வேண்டும்; இவன் சாதாரண மன்னன் அல்ல; நமது ஆற்றலை அறிந்திருக்கிறான்; நமது தாக்கும் சக்தி இவனுக்குப் புரிந்துவிட்டிருக்கிறது; இவனிடம் நாம் மிகத் தாராளமாகப் பேசலாம் — என்றெல்லாம் தோன்றுகிறது. அலுவலர் இருவர் ஆங்கு இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

> இவர்கள் இருவர் இங்கு உளர்! நாம் பேசுவதை எல்லாம் இவர்கள் கேட்டுக் கொண்டு இருப்பதா?

என்று கேட்கிறார் அமைச்சர்.

அமைச்சர் புயலார், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கோட்பாட்டுக்காரர்! எனினும், அவர், மன்னனுடன் தனித்திருந்து அரசியல் விஷயம் பேச வேண்டுமே தவிர, கண்டவர்களின் முன்பு பேசுவது முறையல்ல, என்று எண்ணுகிறார்.

அவருடைய 'ஜனநாயகம்', எல்லோருக்கும், அல்ல! மன்னன் தன் மதிப்பை அறிந்து, தன்னிடம் அரசியல் விஷயமாகக் கலந்துபேசும் அளவுக்கு இருந்தால் போதும் என்று இருக்கிறது.

நாடாளும் மன்னன், அவனை எதிர்த்திடும் மக்கள் தலைவன், இந்த இருவர்கூடிப் பேசி நடத்துவதே ஜனநாயகமாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்.

மன்னன் ஜனநாயகவாதியாகிறார் — அவர்கள் இருப்பதால் தவறு ஏதும் ஏற்பட்டுவிடாது என்கிறார். பிறகு உரையாடல் நடைபெறுகிறது.

அமை:- இதுவரை மன்னர்கள் முன் எவரும் சொல்லிடாத விஷயங்களை நான் இப்போது சொல்லப் போகிறேன் என்பதை உணருகிறீரா?

மன்:- மகிழ்ச்சி அமைச்சரே! மன்னர்களிடம் என்னென்ன சொல்லமுடியுமோ அவ்வளவும் சொல்லியாகிவிட்டதாகத்தான் நான் கருதுகிறேன். ஏதேனும் சிறு அளவு புதுமை இருப்பினும், மகிழ்ச்சி!

அமை:- எச்சரிக்கிறேன் மன்னரே! தித்திப்புப் பேச்சல்ல! நான் வெளிப்படையாகப் பேசுபவன்.

மன்:- தாங்களா? இல்லை! இல்லை! தாங்கள் ஒரு புதிர்! எப்போதுமே எனக்குத் தாங்கள் ஒரு புதிராகவே இருந்து வருகிறீர்.

தம்பி! இந்தப் பேச்சு, அமைச்சருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. தன் சொல், செயல், இவற்றின் உட்பொருள், வலிவு, விளைவு இவைகளைப் பிறர் அறிந்துகொள்ளவே இயலாது. புதிர்போல் இருக்கும் தனது நடவடிக்கை. இன்னதுதான என்று அறியாமல், எவரும் ஏமாந்து போவர், வீழ்ந்துபோவர், என்று அமைச்சருக்கு உள்ளூற ஒரு எண்ணம். அடே, அப்பா! அவன் எமகாதகப பேர்வழி! திட்டம் என்ன போடுகிறான், வழி என்ன தேடுகிறான் என்று கண்டுபிடிக்கவே முடியாதே' கடலாழம் காணலாம், இவன் கருத்தாழம் காண இயலாது எவராலும். இவன் ஓர் நடமாடும் புதிர்!—என்று தன்னைப்பற்றி எவரும் பேசவேண்டும்—புகழிலே இதற்கு நிகர் வேறு இல்லை—என்ற எண்ணம் இந்த அமைச்சருக்கு என்பதைக் கண்டுகொண்டுதான மன்னன, அந்த நரம்பைத் தொட்டான். அமைச்சருக்கு அளவற்ற திருப்தி—மகிழ்ச்சி—புன்னகையை அடக்கிக் கொள்ளவே முடியவில்லை—என் இந்தப் புகழ்மொழி! அப்படி எல்லாம் இல்லை! நான் சாதாரணம்—சாமான்யன்—புதிர் அல்ல — என்று கூற இயலவில்லை.

ஆமாம்—ஒரு விதத்தில் உண்மைதான். நான் ஒரு புதிர்தான்!

என்று தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்கிறான். மன்னன், உள்ளூறச் சிரித்திருப்பான்!

புதிர்போலிருக்கும் உம்மைப் புரிந்து கொள்ள முடியவில்லை—முயற்சித்தும். விளக்கமாகப் பேசும் அமைச்சரே!

ஆம்! வெளிப்படையாகத்தான் பேச வந்திருக்கிறேன், முதலிலே இதை அறிந்து கொள்ளும். இந்த நாட்டை நீர் அல்ல, உமது அமைச்சர்கள் ஆளவேண்டும்.

கடினமான ஆட்சிப் பொறுப்பை அமைச்சர்கள் என் கரத்திலிருந்து எடுத்துக்கொண்டு பார்த்துக்கொள்வதற்கு நான அவர்களுக்கு நன்றி கூறுவேன்.

உம் கரத்தில் இருப்பதாகச் சொல்வது தவறு. உமது அமைச்சர்களின் கரத்தில் ஆட்சிப் பொறுப்பு இருக்கிறது. கட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் காவலன், நீர்! தெரிகிறதா? பெல்ஜியத்தில் இந்த முறையை என்ன பெயரிட்டுச் சொல்கிறார்கள் தெரியுமா?

ரப்பர் ஸ்டாம்ப்! மந்திரி கை முத்திரை என்பார்கள்!

ஆமாம், மன்னவா! ஒரு ரப்பர் ஸ்டாம்பு தான். அப்படித்தான் நீர் இருந்தாக வேண்டும்.

ஆமாம், நாம் அப்படித்தான் ஆகிவிட்டிருக்கிறோம்.

அதென்ன, 'நாம்' என்கிறீர்? என்ன பொருள்?

நம்மிடம் காகிதங்களைக் கொண்டுவருகிறார்கள். கை எழுத்திடுகிறோம். அவைகளைப் படிக்க அமைச்சர்களாகிய உமக்கு நேரம் இல்லை. அது நல்லது. ஆனால், நான் எல்லாவற்றையும் படித்தாகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விருப்பம் இருக்கிறதோ இல்லையோ. சரியோ தவறோ, கையொப்பமிடவேண்டும். குற்றமற்றவர்களுக்குக்கூடத் தூக்குத் தண்டனை தரப்பட்டிருக்கும், நான் கையொப்பமிட வேண்டும். தூக்குத்தண்டனை தரவேண்டிய குற்றம் செய்திருப்பார்கள் சிலர், தண்டனை தர எனக்கு அதிகாரம் இல்லை.

ஓஹோ! கொண்டுவா அவனுடைய தலையை என்று கொக்கரித்த காலம் திரும்பிவரவேண்டும் என்கிறீரா?

தம்பி! உரையாடலின்போதே, மன்னன், அமைச்சரின் உள்ளக்கிடக்கையை புரிந்துகொள்கிறான்.

அமைச்சரே! நான் மன்னனாக இருப்பதிலே ஒரு பிரமாதமும் இல்லை. அரசகுடும்பத்தவன், அரசன் ஆனேன், மற்ற வாரிசுகள் செத்ததால். ஆனால் உங்கள் பெருமையே பெருமை. சாமான்யக் குடும்பம்! வறுமை சூழ்ந்த இளமை. உழைப்பாலும், அறிவுத்திறத்தாலும் உயர்ந்து, நாடாளும் அமைச்சரானீர். மன்னராக இருக்கிறேன், என்ன பலன்? குடிஅரசுத் தலைவராக இருப்பின், எவ்வளவு நிறம்பிய அதிகாரம் கிடைக்கும்! தாங்களே அப்படி, குடிஅரசுத் தலைவராகப் போவதாகவும் கூறுகிறார்கள்—என்று மன்னன், தேன்துளிகளாக்குகிறான் வார்த்தைகளை. சுவைத்து இன்புறுகிறார் அமைச்சர்.

அதென்ன குடிஅரசுத் தலைவரானால் வலிவும் பொலிவும் அதிகம் என்கிறீர்! அப்படியானால் மன்னனாக இருப்பதைவிட குடிஅரசுத் தலைவராவதைத்தானா மேலானது என்று கருதி விரும்புகிறீர்—என்று கேட்கிறார் அமைச்சர்.

அப்படிச் சொல்வதற்கில்லை. அரசனாக இருப்பவர்களுக்கு அதிகாரம் இல்லையே தவிர, அவர்கள் அரசராக இருக்கும் போது, பாதுகாப்பு நிறம்ப இருக்கிறது. ஜனநாயக முறைப்படி தலைவர்களாக வருகிறவர்களுக்கு அந்தப்பாதுகாப்பு இல்லை. போற்றுகிற மக்களே தூற்றிக் கீழே இறக்கிவிடலாம். போட்டிஏற்பட்டு தலைமைப் பதவி போய்விடலாம். வேறு ஒரு தலைவன் தோன்றி, அதிக தீவிரமபேசி, மக்களைத் தன்பக்கம் அழைத்துக்கொள்ளலாம். அப்போது பழய தலைவர்பாடு ஆபத்தாகிப் போகும். மன்னன் என்றால் அந்த ஆபத்து இல்லை. நிம்மதி இருக்கும். பாதுகாப்பு இருக்கும். அதிகாரம் இருக்காது, பரவாயில்லை; ஆபத்தும் இல்லை அல்லவா?

மன்னன், எடுத்துக்காட்டியது, மறுக்கமுடியாத உண்மை என்பது அமைச்சருக்குப் புரிகிறது! புரிகிற காரணத்தாலேயே அச்சமும் ஏற்படுகிறது.

ஜனநாயக முறையிலே ஈடுபட்டுத் தலைவர்களாக அமைச்சர்களாக, உயர்ந்துவிடுவதாலேயே, மண்டைக் கனம் கொண்டுவிடாதீர்கள், ஆபத்து எந்த நேரத்திலும் உமது பதவிக்கு, செல்வாக்குக்கு, தலைமைக்கு ஏற்படலாம்! மக்களின் மனம் மாறிவிடக்கூடும்—வீழ்ச்சி ஏற்பட்டுவிடும். எனவே அமைச்சர் என்ற நிலை கிடைத்ததும், இந்த உயர் இடம் என்றென்றைக்கும் இருக்கும், நம்மை மிஞ்சுவார் இல்லை, என்று எண்ணி இறுமாப்பு அடையாதீர். தலைக்கு மேல் ஆபத்து இருக்கிறது! அதைத் தெரிந்து, இந்தப் பதவி நிலையில்லாதது, இந்தச் செல்வாக்கு சரிந்துபோகக்கூடியது என்பதை உணர்ந்து, பக்குவமாக பண்போடு நடந்துகொள்வதுதான் அறிவுடைமை. —என்று மன்னன், இலைமறைகாய் முறையில் எடுத்துக் கூறுகிறான்.

நுழைந்தபோது இருந்த முடுக்கு, வெகுவாகக் குறைந்துதானேபோகும், மறுக்கமுடியாத உண்மையினை மன்னன் எடுத்துச் சொன்ன பிறகு.

மன்னன் மகள் அங்கு வருகிறாள். மன்னன் வந்தபோது மரியாதை காட்டுவது வலிவற்ற தன்மையைக் காட்டுவதாகும் என்று எண்ணி, எழுந்து நிற்காதிருந்த அமைச்சர், மன்னன், தன் மகளை அறிமுகப்படுத்தியபோது, முக மலர்ச்சியுடன், எழுந்திருந்து, கனிவுடன் கைகுலுக்குகிறான், அரசகுமாரியுடன். அரச குமாரி, அவன ஆடையைக் கூட, சரியில்லை என்று சுட்டிக்காட்டிக் கேலி செய்கிறாள். ஒரு விநாடி, அமைச்சருக்கு, 'சூடு' பிறக்கிறது. இது உழைப்பாளியின் உடை அரசகுமாரி! உத்தமரின் உடை! இதை அணிந்துகொள்வதிலே நான் பெருமை கொள்கிறேன்!—என்று முழக்கம் எழுப்புகிறான். அரசகுமாரி வாதாடவில்லை.

> அதெல்லாம் சரி. அப்படித்தான் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் உமக்கு உடை ஒத்துவரவில்லை. உம்மைப் பார்த்த உடனே, எவரும் சொல்லிவிடுவார்களே, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் இவர், என்று. உமக்கு ஏன், உழைப்பாளி உடை?

அரசகுமாரி, இவ்விதம் பேசக்கேட்டு அமைச்சருக்கு கோபம் வரவில்லை.

> ஒருவிதத்தில் தாங்கள் சொல்வது சரிதான்.

என்று குழைந்து பேசத்தான் முடிகிறது.

மன்னன், மகளை அழைத்துக்கொண்டு செல்கிறான், மற்றோர் சமயம் பேசலாம் என்று அமைச்சரிடம் கூறிவிட்டு.

அமைச்சர், சென்று வருக! என்று மரியாதையாகக் கூறுகிறார்.

அவர்கள் சென்றபிறகு, அலுவலரிடம், அமைச்சர்,

> "என்ன தான் சொல்லு, மன்னன்; மதியிலி அல்ல"

என்று கூறுகிறான்.

மிரட்ட வந்தான் மன்னனை; மன்னன், அந்த அமைச்சரை மயக்கிவிட்டான்.

ஆணவமாக நடந்து அரசனை அவமதிக்க வேண்டும் என்று திட்டமிட்டு நடந்துகொண்டான் அமைச்சன்; இரண்டொரு உண்மைகளைக் கூறியும், உச்சி குளிரும்படி சில புகழுரை பேசியும், தாக்கவந்த அமைச்சனை தழதழத்த குரலிற் பேசுவோனாக்கிவிட்டான், மன்னன்.

மன்னன் மதிமிக்கவன்; மன்னராட்சியுடன் இணைந்த மக்களாட்சியில் இடம்பெற்ற அமைச்சனோ, மண்டைக் கனத்தை மட்டுமே நம்பிக்கிடந்தான். பிறகு? என்று கேட்கிறாய் தம்பி!

எனக்கு இந்த "ராஜா" வேலை வேண்டாம்; விலகிவிடப் போகிறேன்—என்று மன்னன் கூறுகிறான், இந்த அமைச்சர் மட்டுமல்ல, முதலமைச்சர் உட்பட அமைச்சர் அவையேகூடி, மன்னனை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறது, மன்னா! மன்னனாகவே வீற்றிருக்க வேண்டுகிறோம்!!—என்று.

மன்னன் என்ன செய்தான் மேலால் என்று அறிய வேண்டுகிறாய். ஆகட்டும் தம்பி! அடுத்த கிழமை.

அண்ணன்,

அண்ணாதுரை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

6-ம் பக்கத் தொடர்ச்சி

புதையல் கிடைத்ததும் சர்க்காருக்குத் தெரிவித்தாகணும். இல்லேன்னா குற்றம். புதையல், சர்க்கார் உடைமை.

அப்படியானா, சர்க்கார் தான் தோண்டிப் பார்க்கவேணும், புதையல் இருக்குதா, தங்கம், இரும்பு, நிலக்கரி இப்படி என்னென்ன கிடைக்கும்என்பதைக் கண்டுபிடிக்க.

உம்! உம்! நம்ம சர்க்கார்தானே! நிறையத் தோண்டுகிறார்களே கொடிமரம் நட, குழிகளை!!

போடி குறும்புக்காரி! பெட்ரோல் கூடக் கிடைக்கும், தோண்டிப் பார்க்கப்போகிறோம்என்று சதா சொல்லிக் கொண்டுதானே இருக்கிறா.

சொல்லிக்கொண்டுதான் இருக்கறா! ஆனா இன்னும் செய்தபாடுதான் இல்லை.

எனக்கு என்னடிம்மா தெரிகிறது இதெல்லாம். எல்லோரும் என்னைப் போலவா, கிணற்றுத் தவளைகள்... உங்களுக்கு நிறைய ஊர் விவகாரம் தெரிந்திருக்கு.

தவளைகள் விஷயம் தெரியுமோ?

இராத் தூக்கமே போச்சே இப்ப அதுகள் கத்துகிற கத்து.

அதைச் சொல்லல்லே, தவளைகளுக்கு நிறையக் கிராக்கியாம். முன்னே, குரங்குகளுக்குக் கிராக்கி; என்று சொல்வா......

ஆமாம்! இப்ப, தவளை! ரொம்ப ருசியான பண்டமாம், தவளை, அவர்களுக்கு.

செ! வாயைக் கொமட்டறது' சும்மா இருங்கோ.

வாயைக் கொமட்டறதா! டாக்டர்! மனோ! என்ன விஷயம்? கொஞ்சம், பார்த்துச் சொல்லேன்......

ச்சீ! வாயாடிகளா! எழுந்து ஓடுங்க. கேலியா செய்யறீங்க இந்த வயதிலே, எனக்கு எதுக்காகடி, இன்னும் ஒண்ணு—தங்க விக்ரஹம்போல நாலு இருக்குதே......

★

# சூளுரை

**கனாரு**

மெய்கண்டான் என் நெருங்கிய நண்பர். நெருங்கிய நண்பர் என்றால், ஒரே துறையில் பணியாற்றிக்கொண்டு, ஒரே இடத்தில்உறைகின்றோம் என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். வாழ்க்கையை ஒட்டுதற்கு அவர் எழுத்தராகப் பணி—ஊழியம் — புரிந்துகொண்டிருக்கிறார். நான் பிறர் செய்யும் வேலையை மேல்பார்க்கின்ற-குற்றங்களைக் கண்டுபிடித்துத் திருத்துகின்ற பார்வையாளனாக அலுவல் புரிந்துகொண்டிருக்கிறேன். எனினும், எனக்கும் மெய்கண்டானுக்கும் மனப்பான்மை ஒத்திருக்கின்றது. உள்ளக்கிடக்கைகள் ஒரே வகையைச் சார்ந்திருக்கின்றன. இல்லையெனில், நாடிப்போய், தேடிப்பிடித்துச் சந்திக்கவேண்டிய மாறுபட்ட நிலைகளில் தொழிலாற்றி வாழ்ந்துகொண்டிருக்கும எங்களிடையே நட்பு ஏற்பட்டிருக்க முடியாதல்லவா?

நண்பர் எழுத்தர் என்று சொன்னேனே! அவர் வெறும் கணக்கு எழுத்தர் மட்டுமல்லர். வீட்டிலே அவர் ஒரு எழுத்தாளருங்கூட. எனவே, அவருக்கு எப்போதும் வேலை இருந்துகொண்டே இருக்கும்;—படிக்கும் வேலை, எதையாவது ஆராயும் வேலை, எல்லாவற்றிற்கும் மேலாக எழுதும்வேலை. அவர் காலை நேரத்தை எழுதுவதற்கென்றே ஒதுக்கிவைத்திருந்தார். மாலைநேரத்தை, அதாவது எற்பாடு (ஆட்) வந்துசேரும் காலந்தொட்டுச் சிலவேளை பின்னிரவு வரை படிப்பது, எழுதியவற்றைச் சரிபார்ப்பது, இன்னும் எழுதுவதற்கான செய்திகளைத் தயார் செய்வது ஆகிய இந்த வேலைகள் நடக்கும். மொத்தத்தில், அவர் இட்டப்படி அவரால் இப்படி அப்படி விலகமுடியாது. எப்போதும் வேலை இருந்துகொண்டே இருக்கும். என்றாவது ஒரு நாள் அலுவலகத்தில் விடுமுறை இடைக்கும்போது ''புண்ணியவான், நீ நல்லா இருக்கவேண்டும'' என்று பாமரப் பாட்டாளியின் மொழியிலே அலுவல் தலைமையை அவர் வாழ்த்துவது பார்க்கத் தகுந்த அபூர்வமான வேடிக்கை.

இப்படிப்பட்ட நண்பரை நான் காண வேண்டுமென்றால், அவருடைய திட்டம், அல்லது வேலை ஏதாவது ஒன்றுக்கு ஊறுசெய்துவிட்டுத்தான் அவரைப் பார்க்க வேண்டும். எனக்குப் பிடிப்பதில்லை அவர் பணிக்கு இடைஞ்சலாக இடையீடு, தலையீடு புரிந்து அவரைப் போய்ப் பார்ப்பது. சில நாட்கள் அவர் உறைகின்ற அறை வரை சென்றுவிட்டு, அவர் பணியில் ஈடுபட்டிருக்கும் பான்மையினைக் கண்டுவிட்டுப், பேசாமல், ஓசையின்றித் திரும்பி வந்துவிடுவதுண்டு நான். என்றாலும், நட்பு என்பது இருக்கிறதே, அது விட்டுவிடுகின்றதா? சில நாட்கள் திடீரென்று, எதையும் இலட்சியம் செய்யாமல் அவர் முன்னால் போய் உட்கார்ந்துவிடுவேன். அவரும் எல்லாவற்றையும் ஏறக்கட்டிவிட்டு என்னோடு பேசக்கிளம்பிவிடுவார்.

ஒரு நாள் மெய்கண்டானின் அறையை நோக்கிச் சென்றபோது உள்ளே பேச்சொலி கேட்டது. நண்பர், மாணவன் ஒருவனோடு உரையாடிக்கொண்டிருந்தார். பேச்சு, பொதுப்பேச்சு — நண்பரிடத்தில்தான் எந்நாளும் மறைத்து, மாற்றிப்பேசும் செய்திக்கு இடமிருந்ததில்லையே! நானும் உள்ளே நுழைந்தேன். நண்பர் வழக்கத்துக்கு ஒருபடி அதிகமாக என்னை வரவேற்றார். அமர்ந்தேன் நான். அவர்களின் உரையாடல் தொடர்ந்தது.

''தம்பி நீ எதற்காகப் படிக்கிறாய்?''

பையன் திகைத்தாற்போல் மெய்கண்டானின் முகத்தை நோக்கினான். பிறகு சொன்னான்:

"எனக்குப் படிப்பின்மீது அளவு மீறிய ஆசை. எப்படியாவது நான் ஒரு பட்டதாரியாக வேண்டும் என்று விரும்புகிறேன். நான் படித்து நல்லதொரு அலுவலில் அமரவேண்டுமென்று என் அன்னை விழைகிறாள்''

"உன் படிப்புக்குத் தடையாக இருப்பவை யாவை?''

''என் குடும்பத்து வறியநிலை. உதவுவார் யாருமில்லை. குடும்பத்தை நடத்துவதே என் அன்னையார்தான். என்னோடு உடன்பிறந்தார் நால்வர் — அனைவரும் சிறுவர்.''

''உங்கள் குடும்பம் எப்படி நடைபெறுகிறது?''

''என் அன்னையார் எப்படியோ நடத்துகின்றார்கள்''

''எப்படியோ என்றால்?''

பையன் பதில் சொல்லவில்லை.

''சரி உனக்கு வயது என்ன ஆகிறது?''

''பத்தொன்பது.''

"என்ன படிக்கிறாய்?" என்றேன் நான் இடைமறித்து.

"பள்ளி இறுதித் தேர்வுக்கு இப்போதுதான் படித்துக்கொண்டிருக்கிறான். சம்பளச் சலுகை கோரி விண்ணப்பம் எழுதவேண்டுமாம். இந்த மாதிரி மாணவர்களுக்குத் தாராளமாகவும், கட்டாயமாகவும் சம்பளச் சலுகை தரவேண்டுவது அரசின் கடமை. ஆனால், அரசுக்கு இந்த மாதிரி முக்கிய செய்திகளை எல்லாம் கவனிக்க நேரமில்லை. அதனால் இந்தப் பையன் மாற்றுவழியொன்று கண்டுபிடித்துக்கொண்டு வந்திருக்கிறான். இவனுடைய சான்றுத்தாளில் இவன் உயர்ந்த வகுப்பைச் — சாதியைச் — சேர்ந்தவன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவன் படிக்கும் பள்ளியில் உள்ள யாரோ சொன்னார்களாம்: 'இவன் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவன் என்று பொய் விண்ணப்பம் தயாரித்து 'மேலே' அனுப்பிச் சம்பளச் சலுகை எளிதில் பெற்றுவிடலாமென்று. அதற்காக இப்போது இங்கே வந்திருக்கிறான். பொய் விண்ணப்பம் எழுதித் தரும்படி என்னைக் கேட்கிறான்." என்றார் மெய்கண்டான்.

நான் பையனை ஏற இறங்கப் பார்த்தேன். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"தம்பி, நீ எதற்காகப் படிக்கிறாய்?" என்று நண்பர் முதலில் கேட்ட கேள்வியை நானும் கேட்டுவிட்டு மேலே தொண்டையைக் கனைத்துக்கொண்டுப் பேச முனைந்தேன். அதற்குள் நண்பர் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கினார்:

"தம்பி எப்படியாவது பட்டதாரி என்ற பட்டம் பெற்றுவிடவேண்டும் என்று நீ துடிக்கிறாய். அதற்காக எந்த வழியையும் பின்பற்றலாம் என்று நீ நினைக்கிறாய்! அப்படி முயன்று, நீ வெற்றியும் பெறலாம். அந்த வகையில் உனக்குத் துணைபுரிய எத்துணையோ பேர்— உன் பள்ளியில் உனக்கு ஆலோசனை சொன்னார்களே, அப்படிப்பட்டோர்—காத்துக்கொண்டும் இருக்கலாம். அந்த முயற்சியால் நீ பட்டதாரியாக மட்டுமல்ல, வாழ்க்கையிலும் உயர்வைக் காணலாம். பொருளும் ஈட்டலாம்; பார்த்தோர் மதிக்க, வணங்க, வாழவும் வாழலாம். ஆனால், அதிலே பயன் என்ன தம்பி—நல்ல பயன்? ஒன்றுமே இல்லை. உன் படிப்பின் அடிப்படையே, கல்வியின் நோக்கமே—அதனால் பொடிப் பொடியாகிவிடுகிறது. எந்த நீதியையும், நேர்மையையும், உண்மையையும், அன்பையும் ஒழுக்கத்தையும் தூய்மையையும் நாட்டிலே, மாந்தரிடையே பரப்ப வேண்டும்,...... நிலைநாட்டவேண்டும் என்று, குறிக்கோளுடன் கல்வி கற்பிக்கப்படுகின்றதோ, கற்கப்படுகின்றதோ அவை எல்லாம் வெறும் கேலிப் பொருள்கள், பயனற்ற பொருள்கள், தள்ளி, ஒதுக்கிப், புதைத்து, மறைக்கவேண்டிய வெட்டிப் பொருள்கள் ஆகிவிடுகின்றன. காலப்போக்கில் வெறும் தத்துவத்துக்காகக்கூட அவற்றை யாரும் பேசமாட்டார்கள். இந்த வகையிலும், முறையிலும் முன்னேறியவர்களிடம் நாட்டுப்பற்றைக் காண முடியுமா? மொழிப்பற்றைக் காண முடியுமா? உண்மை மீதும், அன்பின் மீதும் ஈடுபாட்டைக் காண முடியுமா? தம்பி, வாழ்க்கை என்றால் என்னவென்று உனக்குத் தெரியாது. உன் உள்ளம் இளம் உள்ளம். அந்த இளம் உள்ளத்தில் நல்லவற்றைப் பதியவைக்க வேண்டுவதுதான் கல்விக்கூடங்களின் வேலை. நீ சொல்வதைப் பார்த்தால், அங்கே நல்லவை தூவப்பெறவில்லை. அல்லவை தாம் நிரம்ப விதைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலை எங்கு கொண்டு போய் விடுமோ!"

"நீங்கள் மிகைப்படுத்தி நினைக்கின்றீர்கள்; சொல்கிறீர்கள்! எங்கோ ஒன்றிரண்டு கல்விக்கூடங்களில் இப்படிப்பட்ட தவறான செயல்கள் நடைபெறுகின்ற முன்னிலையால், எல்லாக் கல்விக்கூடங்களுமே தீயசக்தி உடையன என்று கூறுதல் தகாது. ஒன்றை வேண்டுமானால் சொல்லலாம். எப்படியாவது முன்னேறவேண்டும், உயர்வு காணவேண்டும் என்ற முறையில் செயல் புரிவோரின் தொகை இப்போது பெருகிக் கொண்டு வருகின்றது. நாடு, மொழி, இனம் என்பனவற்றைப் பற்றிக் கவலைகொள்ளாமல் உயர்ந்த பீடத்தில் இருக்கின்ற சிலரும், அவ்வகையோர்க்கு உதவுவோரும் இதற்குச் சான்றாக நிற்கின்றனர். அவர்கள் எல்லாம் உண்மையையும், அன்பையும் தூக்கி எறிந்துவிட்டு முன்னேறியவர்கள். 'அக்பர் காலத்தில் இல்லாத அநீதி இப்போது ஏன்? அசோகர் காலத்தில் இல்லாத அநீதி இப்போது ஏன்? நாடு மொழி, இனம் இவற்றைப்பற்றிய எண்ணமே இல்லையே உங்களிடம்! இது சரியா? இது தகுமா? என்று நல்லறிஞர்கள் கேட்டால், 'நாடாவது, மொழியாவது, இனமாவது! எல்லாம் ஒரு நாடுதான். எல்லாம் ஒரே மொழிதான் — எல்லாம் நம் மொழிதான். இது அக்பர் காலம் அல்ல; அசோகர் காலம் அல்ல; அணுகுண்டுக் காலம்; சந்திர மண்டலத்துக்குப் பயணம் செய்யும் காலம் இது. அப்போது ஒரு நிலையில் இருந்தது. இப்போது தலைகீழாகத்தான் மாறி இருக்கவேண்டும். அதாவது அப்போது உரிமை வாழ்வு வாழ்ந்தவர்கள் 'இப்போது அடிமைகளாகத்தான் உய்யவேண்டும். அதுதான் உண்மையான நேர்மை' என்ற முறையில் பேசுகின்றவர்களும் இருக்கின்றார்கள். அத்தகையோர் எல்லாம் இப்படிக் குறுக்கு வழியில் முன்னேறியவர்கள்தாம். குறுக்கு யோசனை புரிவோர்தாம்."

இடை இடையே அந்த மாணவனையும் கவனித்தேன் நான். அவன் அடிக்கொரு முறை முகத்தைச் சுளித்துக்கொண்டான். எங்கள் பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதைத் தெள்ளத் தெளியத் தன் மெய்ப்பாடுகளால் அவன் காட்டிக்கொண்டிருந்தான். முடிவாக அவன் அங்கிருந்து அகல முனைந்தான். "போய் வருகிறேன்" என்று அவசர அவசரமாகக் கூறிவிட்டு ஓடியே ஓடிவிட்டான்.

பிறகு நண்பர் சொன்னார்:

"இந்த மாணவனைப் பார்க்கும்போது, என்னையறியாமல் இரக்கம்தான் ஏற்படுகிறது. ஆனால் இவன் செய்கின்ற செயல், இவன் குடும்பத்து நிலை, அவர்கள் வாழ்கின்ற முறை, இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்தால் வெறுப்புள்ளம் மேலோங்கிவிடுகிறது.

"இவன் குடும்பத்தில் இவனுடைய அன்னை ஒருத்திதான் உழைக்கின்றாள். நாலைந்து சிறுவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வேலை செய்யும் பருவத்தினர் அல்லர். இவனுக்கு வயது பத்தொன்பது. படிப்பதைத் தவிர வேறு எதையாவது இவன் செய்கின்றான் என்றால், அது சூழ்ச்சியான செயல்கள் மூலம் எப்படி எப்

(16-ம் பக்கம் பார்க்க)

# திட்டத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்!

தங்கவயல் — லோகிதாசன்

நாமும் சுதந்திரம் பெற்றுப் பதின்மூன்று ஆண்டுகட்கு மேலாகி விட்டது என்று ஆண்டுதோறும் விழாக்கொண்டாடுகிறார்கள், சுதந்திரத்தைத் தங்களது சொந்தப் பொருளாக்கிக் கொண்டிருப்பவர்கள்!

கோடி கோடியான ரூபாய்க்குத் திட்டங்கள்! கிடைத்த பலன்? விடை ஒன்றுமில்லையென்பது தான். இதை நாடறியும்; மக்கள் உணர்வர்; ஏன் பிரதமர் நேருவே வியக்கிறார் பணம் மறைந்த விந்தையைக் கண்டு!

வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வழியே இல்லையா? அரிசியின் விலை ஏன் இப்படி ஏறிக்கொண்டே போகிறது? துணிகளின் விலை ஏன் இப்படி அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது? விலையேற்றத்திற்கு ஒரு வரம்பு என்பது இடையாதா? என்று நாம் கேட்போமானால், பொருள்கள் இப்போதுதான் போட்டுக்கொண்டிருக்கிறோம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமென்கிறார்கள்! இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் இவர்கள் இந்தத் திட்டங்களைக் காட்டிக்கொண்டும், போட்டுக்கொண்டும் இருக்கப்போகிறார்களோ என்பது நமக்குப் புரியவில்லை!

ஆனால், பதின்மூன்று ஆண்டுகட்கு மேலாக ஆட்சியின் பொறுப்பைத் தன் கையிலே வைத்துக்கொண்டிருக்கும் இந்தக் காங்கிரஸ் அரசாங்கம், சாதிக்கமுடியாதக் காரியத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளில் மின்னல் வேகத்தில் சாதித்திருக்கின்றனர் மேற்கு ஜெர்மானியர்கள்!

இரண்டாவது உலகப்போரின் இறுதியில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஜெர்மானிய மக்கள், பசியாலும் பட்டினியாலும் துன்புற்றிருந்தனர். அந்நிலையில் அவர்களுக்குக் குறைந்த பட்ச தேவையில் 40 சதவிகித உணவே கிடைத்தது. 1946-47ல் உற்பத்தியான அளவுப்படி அந்நாட்டில் ஒவ்வொருவருக்கும் 40 ஆண்டுகளுக்கு ஒரு கால் சட்டையும், 20 ஆண்டுகளுக்கு ஒரு மேல் சட்டையும்தான் கிடைத்தது.

இந்நிலையில் இருந்த ஜெர்மனி பதின்மூன்று ஆண்டுக் காலத்திற்குள், அவர்கள் தங்களுடையவாழ்க்கைத் தரத்தை மிகப் பெரிதாக உயர்த்திக்கொண்டிருக்கின்றனர். 1950-ம் ஆண்டிலிருந்து 1958-ற்குள் பெரிய தொழிற்சாலைகளில் 33770 கோடி ரூபாய் மூலதனமாகப் போடப்பட்டிருக்கிறது!

பத்து ஆண்டுகளில் ஒரு கோடி எண்பத்தெட்டு இலட்சம் பேருக்கு வேலையளிக்கப்பட்டிருக்கிறது! ஏற்றுமதியின் அளவு 451 கோடியிலிருந்து 4070 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது! 1958-ல் மொத்தத் தேசிய உற்பத்தி 24,240 கோடி ரூபாயாகும். சேமிப்போ 176 கோடியிலிருந்து 3443 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது! ஜெர்மன் தேசிய பாங்க் சுமார் 2574 கோடி ரூபாய்க்கு மேல் லேவாதேவி நடத்துகிறது!

இத்தகைய வளர்ச்சிகளுக்கு அந்நியர்களின் பணமும், மூலதனமும் உதவியாக இருந்தாலும், நாளடைவில் தன் காலே தனக்குதவி என்ற முறையில் தங்களுடைய கடுமையான உழைப்பாலும், நம்பிக்கையாலும் சிறந்தவிதமாக முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றனர்!

சின்னஞ் சிறிய நாடான மேற்கு ஜெர்மனி இத்தனைப்பெரிய வளர்ச்சியை வகுத்துக்காட்டும்போது, இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தை வைத்துக்கொண்டு இந்த ஆளவந்தார்கள் என்னதான் செய்துகொண்டிருக்கிறார்களோ? இவர்கள் அந்நிய நாடுகளிலே பெறும் கடனும், மூலதனமும் குறைவாகவா இருக்கிறது? இல்லை. அதன் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டுகொண்டேயிருக்கிறது!

ஜெர்மனியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயிருப்பது நிலக்கரி, இரும்பு, எண்ணெய் இவை போன்ற பொருள்களேயாகும். ஆறுமாத காலத்தில் 130 லட்சம் டன் இரும்பும், 39,87,000 இலட்சம் கிலோவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்றால், ஜெர்மனியின் வளர்ச்சியைக் குறித்து நாம் ஏதும் சொல்வதற்கில்லை!

இங்கு, தென்னகத்தில்புதைந்து கிடக்கும் இரும்பையும், நிலக்கரியையும், மற்றும் ஏனைய பொருள்களையும்பற்றி நாம் பன்னிப் பன்னிக் கூறினும் அத்தனையும் செவிடன் காது சங்காகிறது இங்கே!

கப்பல் கட்டி விற்பதில் ஜெர்மனி இன்று முன்னணியில் நிற்கிறது. கப்பல் கட்டும் தொழில் மூலம் மட்டும் 11,00,558 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர் அங்கே!

அமெரிக்காவே ஜெர்மனியிலிருந்து இயந்திரங்களையும், இரயில் என்ஜின்களையும் இறக்குமதி செய்கிறதென்றால், ஜெர்மனியின் தொழில் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் நம்மால் அளவிடமுடியுமா?

தொழில் துறையில் வளர்ச்சியின் உச்ச நிலையையடைந்துவிட்ட ஜெர்மனியில் மேலும் வெளிநாடுகளிலிருந்து 'ஆர்டர்கள்' வந்த வண்ணமாகவே இருக்கின்றனவாம்! ஆனால், அங்கு தொழிலைச் செய்வதற்கு ஆட்கள் கிடைக்கவில்லையாம்!

இவ்வருட இறுதியில் 5,38,000 வேலை காலியிருந்ததாம். இதைச் சரி செய்வதற்கு ஜெர்மனியில் ஆட்கள் கிடைக்காத காரணத்தால், வெளி நாடுகளிலிருந்து வேலை தேடி வருபவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றதாம்! இதில் 74000 இதாலியர்களும், 8000 கிரேக்கர்களும், 3500 ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களும் இடம் பெற்றிருக்கின்றனராம்! இதனால் வெளி நாட்டாரின் எண்ணிக்கை அங்கே 2,76,000க்கு கூடியிருக்கிறதாம்! எனவே, யுத்தக் காலத்தில் கானடா போன்ற வெளிநாடுகளிலே போய்க்குடியேறிவிட்ட ஜெர்மானியர்களுக்குத், தங்கள் நாட்டுக்குத் திரும்பும்படி அழைப்பு விடுத்திருக்கிறார்களாம்!

வேற்று நாட்டை அண்டியவர்க்கு ஊர் திரும்ப வேண்டுகோள் அங்கே! பிழைக்க வழியில்லாமல் கள்ளத்தோணியிலே சென்று கடலிலே பிணமாக மிதக்கின்றனர் இங்கே! இந்நாட்டில் பிறந்தவர்க்கு வாழ வழியில்லை இங்கே! பிற நாட்டானுக்கு வேலை கொடுக்குமளவுக்கு வளர்ச்சி அங்கே!

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

ஆள் பஞ்சத்தின் காரணமாக முடிந்தளவு இயந்திரங்களினாலேயே தொழில்களைச் செய்ய முற்பட்டிருக்கின்றனராம்!

இத்தனை சாதனைகளையும் அவர்களால் எப்படிச் சாதிக்க முடிந்தது? அவர்களென்ன மந்திர ஜால மகேந்திர ஜாலங்களைக் கற்றவர்களா; புராணத் தலைவர்களைப் போல? அவர்களது வெற்றிக்குக் காரணம் பணத்தைச் செலவழித்த வழியும், தொழிலைச் செப்பனிட்ட முறையுமேயாகும்!

இவ்வழியில் போடும் பணம் இன்ன பலனைத் தருகிறது. இந்தத் திட்டத்தின் பலனை மக்கள் இவ்விதமாக அனுபவிக்கலாம். இத்திட்டத்தால் தனிப்பட்டவர்கள் இலாபமடைய முடியாது. இத்தனை பேருடைய உழைப்பும் வீண் போக வழியில்லை. சளையாத உழைப்பு; அதற்கேற்ற ஊதியம்! என்ற முறையிலே ஒவ்வொன்றையும் ஆய்ந்தறிந்து திட்டமிட்டுச் செயலாற்றியதனாலேயேயன்றி வேறொரு வித்தையுமல்ல!

மேற்கு ஜெர்மனி அங்கே செய்துகாட்டியிருக்கும் இந்த வளர்ச்சியை, "பாரதப் புத்திரர்கள்" ஏன் செய்து காட்டக் கூடாது இங்கே?

இவர்களைச் சொல்லியும் குற்றமில்லை, பாவம் இவர்கள் தங்கள் கட்சியின் சண்டையைக் கவனிக்கவே ஆண்டுகள் போதாதே! இந்நிலையில் நாட்டின் திட்டத்தை எங்கே கவனிக்க முடியும்?

சுயநலமும், சூழ்ச்சி மனப்பான்மையும், பொறுப்பற்ற தன்மையுமே இவர்களுடைய திட்டங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாய் விளங்குகின்றன!

குறுகிய காலத்தில் குன்றெனக் குவிகிறது வளம் அங்கே! திட்டங்கள் பல தீட்டியும், கோடிகள் பல கணக்கற்றுக் கொட்டியும் வறுமை ஏன் வாட்டுகிறது இங்கே?

இவர்கள் பதில் சொல்லவா போகிறார்கள்? சொன்னாலும் சொல்லுவார்கள்-நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடே உயர்ந்துவிடுமென்று'ம்......நம்புவதற்கும் ஆட்கள் இருக்கிறார்களே! ★

14-ம் பக்கத் தொடர்ச்சி

படி எல்லாம் தான் வாழ்க்கையில் உயர, பெருமை பெற முடியும் என்பதை ஆராய்வதுதான். உழைப்பில் இவனுக்கு நம்பிக்கையே இல்லை."

"பாவம், இவ்வகைப்பட்ட இளைஞர்களை எல்லாம் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வந்தால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை. இவர்கள் போக்குப்படி விட்டுவிட்டால் நாட்டில் நாச சக்தி பெருகிவிடும். எப்படியாவது வாழவேண்டும், எப்படியாவது ஆளவேண்டும் என்ற எண்ணம் பெருகிப் போய் விடும். இன்று நாம் காண்கின்றோமே, கள்ளக் கடத்தல் புரிவோர், கள்ள நாணயம் தயாரிப்போர், இன்னும் மிகக் கேவலமான,—அஞ்சுதல் நிறைந்த சமூக விரோதச் செயல்கள் புரிகின்றார்களே, அவர்கள் எல்லாம் இவ்வகைப்பட்ட மாணவ நிலையிலிருந்து, அதாவது மாண்பை அவமாக்கும் பயிற்சி நிலையிலிருந்து வளர்ந்தவர்கள் தாம்."

இவற்றை எல்லாம் தடுத்து ஒடுக்க முடியாதா?"

"முடியும். அடித்தளத்திலிருந்து உச்சி வரை நாட்டு நிலை, சிறப்பாக ஆட்சி நிலை ஒரே தரத்தில், ஒரே சீரில், ஒரே பாங்கில்—அதாவது நீதி, நேர்மை, உண்மை இவற்றின் அடிப்படைமீது இயங்க வேண்டும். நம் நாட்டைப் பொறுத்தவரை இன்று அது முயற்கொம்பு. 'யார் ஆண்டால் என்ன? நாம் உயரவும், இங்குள்ளோரிடம் அதட்டி, மிரட்டி, அதிகாரம் புரியவும் நமக்கு வாய்ப்பு இருக்கின்றதே, அது ஒன்றே போதும் என்ற மனப்பாங்கு உள்ளோரிடம்தான் இன்று ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மக்களின் உரிமை உணர்வு மங்கிக்கிடக்கின்றது. உரிமை என்றால் என்னவென்றே புரியாத நிலையில் பலர் இன்னும் இருட்சகதியில் அழுந்தி, அமிழ்ந்து கிடக்கின்றார்கள். முதற்கண் மக்களிடத்தில் நாட்டுணர்வு, சமூக உணர்வு, மொழியுணர்வு, நல்லுணர்வு இவை கிளர்ந்து, உறுதி பெறவேண்டும். அப்போது தான் உரிமைபெறும் முனைப்பைப் பெறமுடியும். அந்த உரிமையின் அடிப்படைமீது நிறுவுவதுதான் உண்மையான ஆட்சி. அந்த ஆட்சியால்தான் நீதியையும், நேர்மையையும், உண்மையையும் கடைப்பிடிக்கமுடியும். உரிமை பெற்ற வாழ்வு எனப்படுவதும் அதுவேதான்.

அவ்வகை உரிமையாட்சி அமைப்பினால்தான் தன்னலம் குறையும்; குற்றங்கள் மறையும்; துன்பங்கள் குறையும்; — அதனால் சூழ்ச்சியும் குறையும். அதன்மேல், நல்ல மனப்பான்மை வளரும், அன்பு மனப்பாங்கும் அறிவு மனப்பெற்றியும் பெருகும், சிறக்கும், அப்போதுதான் நீதியும், நேர்மையும், உண்மையும், ஒழுக்கமும் காக்கப்பெறும்."

"அதுவரை கயவர்களின் தொகை பெருகிக்கொண்டே போகவேண்டுவதுதானா? அதைத் தடுத்து மாற்ற இடையில் வழியேதும் இல்லையா?"

"உண்டு வழி! உம்மைப்போன்ற உறுதி படைத்தவர்கள், கயமையைக் கயமை என்று கூறும் துணிச்சல் பெற்றவர்கள் அப்படிச் சொல்லவேண்டிய இடங்களில் எல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். தடுக்கவேண்டிய இடங்களில் எல்லாம் தடுத்துக் கொண்டே போகவேண்டும்."

"நன்று சொன்னீர்கள்! அவ்வாறு செயல்புரிவது இனி என் கடமை!" என்று நண்பரிடம் குறுரை பகர்ந்துவிட்டுக் கிளம்பினேன் நான். ★

காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.